# சேலம் மாநகராட்சி

**2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள் 2023, அத்தியாயம் 4, பகுதி I-ன் கீழ் சேலம் மாநகராட்சியின் அவசரக்கூட்டம் நடைபெறும்.**

---

## பொருள்கள்

**1)** சேலம் மாநகராட்சி 2024–2025 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ், சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண். 22–இல் போடிநாயக்கன்பட்டி ஓடை பகுதியில் கான்கிரீட் சுவருடன் கூடிய மழைநீர் வடிகால் கால்வாய் அமைக்கும் பணியினை 2024–25 ஆம் ஆண்டு செந்தார விலைவிகித பட்டியல்படி தொழில்நுட்ப அங்கீகாரத்துடன் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 49.50/– இலட்சத்தில் மேற்கொள்ள, பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியை பெற்று மேற்படி தொகைக்கு நிர்வாக அனுமதியும், அதன் பேரில் முதல் முறையாக 13.03.2025ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. மேற்படி தேதியில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (L1) | ரூ. 42,21,550/– | **2.83%** மதிப்பீட்டை விட அதிகம் | e Procurement Ref.No 6321451269760, ரூ. 49,500/- UTR No. CPAEXJVCY2 நாள். 12.03.2025/SBI Bank |
| 2 | மெசர்ஸ். மெழுகு செட்டியார் ராஜேந்திரன் (L2) | ரூ. 43,83,616/– | 6.78% மதிப்பீட்டை விட அதிகம் | e Procurement Ref.No 6321451269773, ரூ. 49,500/- UTR No. CPAEXJVTD6 நாள். .12.03.2025/SBI Bank |

தொடர்ச்சி..

மேற்காணும் பணியை நிறைவேற்ற வரிசை எண். 1-இல் கண்டுள்ள மெசர்ஸ். ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், தருமபுரி (L1) என்ற ஒப்பந்ததாரர் ரூ. 42,21,550/- என மதிப்பீட்டை விட 2.83% அதிகமாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியின் மீது இவ்வலுவலக 14.03.2025ஆம் தேதி அறிவிப்பில் ஒப்பந்தப்புள்ளியின் மீது விலை குறைப்பு (Negotiation) செய்து தருமாறு ஒப்பந்ததாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மேற்படி கடிதத்தை தொடர்ந்து 17.03.2025ஆம் தேதிய கடிதத்தில் அதிகம் வழங்கப்பட்ட மதிப்பீடு தொகை 2.83% (ரூ. 42,21,550/-) இல் இருந்து விலை குறைத்து (ரூ. 41,02,041) - 0.08% என வழங்க சம்மதிக்கிறேன் என மெசர்ஸ். ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், தருமபுரி ஒப்பந்ததாரர் கடிதம் வழங்கியுள்ளார்.

எனவே 17.03.2025ஆம் தேதி விலை குறைப்பு கடிதத்திற்கு பின் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | 17.03.2025ஆம் தேதி விலை குறைப்பு கடிதத்திற்கு முன் ஒப்பந்தப்புள்ளி தொகை மற்றும் சதவீதம் | 17.03.2025ஆம் தேதி விலை குறைப்பு கடிதத்திற்கு பின் ஒப்பந்தப்புள்ளி தொகை மற்றும் சதவீதம் |
|---|---|---|---|
| 1 | **மெசர்ஸ். ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (L1)** | **ரூ. 42,21,550/-<br>2.83% மதிப்பீட்டை விட அதிகம்** | **ரூ. 41,02,041/-<br>0.08% மதிப்பீட்டை விட குறைவு** |
| 2 | மெசர்ஸ். மெழுகு செட்டியார் ராஜேந்திரன் (L2) | ரூ. 43,83,616/-<br>6.78% மதிப்பீட்டை விட அதிகம் | ரூ. 43,83,616/-<br>6.78% மதிப்பீட்டை விட அதிகம் |

மதிப்பீட்டு தொகையை விட (ரூ. 41,02,041) - 0.08% விலை குறைத்து வழங்கியுள்ள மெசர்ஸ். ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், தருமபுரி (L1) என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ8/ம.எண். 70டி /2024-25)**

**தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.**

2) **நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின்** 09.10.2017 **ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நோய்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதமாக ஏடிஸ் கொசுக்களை கட்டுப்படுத்துதல், கொசு புழுக்களை கண்டறிந்து அழித்தல் போன்ற டெங்கு நோய் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்ள** 300 **வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் இம்மாநகராட்சிக்கு மொத்தம்** 700 DBC **பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டிய காலங்களில், நோய் தாக்கத்தின் தன்மைக்கேற்ப தேவையான எண்ணிக்கையில்** DBC **பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு** வருகிறது.

**அதன்படி**, **சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள** ஏற்கனவே 01.01.2025 முதல் 31.03.2025 முடிய 700 DBC பணியாளர்களை **பணியமர்த்திட மாமன்ற தீர்மானம் எண்**. 580 **நாள்**: 24.12.2024 **ல் அனுமதிக்கப்பட்டு**, 700 **பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு** வருகின்றனர்.

தற்போது கோடை மழை தொடங்கியுள்ளதாலும், கோடைக் காலத்தில் அதிக அளவில் கொள்கலன்களில் நீர் சேமித்து வைக்கப்படுவதாலும், அதிக அளவில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாக வாய்ப்புள்ளது. எனவே, மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்திட **கீழ்கண்ட விபரப்படி சூரமங்கலம்** வார்டு அலுவலகத்திற்கு 100 எண்ணிக்கையிலான பணியாளர்கள் வழக்கமான தினசரி அட்டவணைப்படி கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளவும், கோட்டத்திற்கு தலா 5 பணியாளர்கள் வீதம் மொத்தம் 70 பணியாளர்களை கொண்டு அமைக்கப்பட்ட 14 விரைவு குழுக்கள் பொது இடங்கள், வணிக நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் முக்கிய நோய் பரவக்கூடிய பகுதிகளில் (Hot spot) குழுவாக இணைந்து சிறப்பு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், மொத்தம் 170 DBC பணியாளர்களை 01.04.2025 முதல் 28.06.2025 முடிய 89 நாட்களுக்கு சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட பகுதிகளில் பணிகளை மேற்கொள்ள **பணியமர்த்த வேண்டியது அவசியமாகிறது.**

| வ.எண். | வார்டு அலுவலகம் | வழக்கமன கொசு ஒழிப்புபணி பணியாளர்கள் | விரைவு குழு பணியளர்கள் | மொத்த DBC பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | சூரமங்கலம் | 100 | 70 | 170 |
| | **மொத்தம்** | **100** | **70** | **170** |

தொடர்ச்சி..

எனவே, மேற்கண்ட விபரப்படி 170 மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களை DBC பணியாளர்களாக 01.04.2025 முதல் 28.06.2025 முடிய 89 நாட்களுக்கு அல்லது அதற்கு முன்பாக தேவைப்படும் காலம் வரையிலோ பணியமர்த்தவும், அவர்களுக்கு ஊதியமாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 01.04.2024 முதல் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.473/-வீதம் வழங்கிடவும், ஊதியம், தொழிலாளர் நல வருங்கால வைப்புநிதி (EPF) மற்றும் காப்பீட்டுறுதி சந்தா தொகை (ESI) ஆகியவற்றின் பணி வழங்குவோர் பங்களிப்புத் தொகை ஆகியவை உள்ளடங்கி பணியாளர் ஒருவருக்கு நாள் 1-க்கு ரூ.550/- வீதம் 89 நாட்களுக்கு 170 பணியாளர்களுக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.83.25 இலட்சத்திற்கான செலவினத்தை சூரமங்கலம் வார்டு அலுவலகத்தின் மூலம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:-

அனுமதிக்கலாம்.

(எப்2/4871/2025)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

3) **நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின்** 09.10.2017 **ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நோய்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதமாக ஏடிஸ் கொசுக்களை கட்டுப்படுத்துதல், கொசு புழுக்களை கண்டறிந்து அழித்தல் போன்ற டெங்கு நோய் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்ள** 300 **வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் இம்மாநகராட்சிக்கு மொத்தம்** 700 DBC **பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டிய காலங்களில், நோய் தாக்கத்தின் தன்மைக்கேற்ப தேவையான எண்ணிக்கையில்** DBC **பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு வருகிறது.**

**அதன்படி, சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே** 01.01.2025 முதல் 31.03.2025 முடிய 700 DBC பணியாளர்களை **பணியமர்த்திட மாமன்ற தீர்மானம் எண்**. 580 **நாள்**: 24.12.2024 **ல் அனுமதிக்கப்பட்டு**, 700 **பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.**

தற்போது கோடை மழை தொடங்கியுள்ளதாலும், கோடைக் காலத்தில் அதிக அளவில் கொள்கலன்களில் நீர் சேமித்து வைக்கப்படுவதாலும், அதிக அளவில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாக வாய்ப்புள்ளது. எனவே, மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்திட **கீழ்கண்ட விபரப்படி அஸ்தம்பட்டி** வார்டு அலுவலகத்திற்கு 100 எண்ணிக்கையிலான பணியாளர்கள் வழக்கமான தினசரி அட்டவணைப்படி கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளவும், கோட்டத்திற்கு தலா 5 பணியாளர்கள் வீதம் மொத்தம் 70 பணியாளர்களை கொண்டு அமைக்கப்பட்ட 14 விரைவு குழுக்கள் பொது இடங்கள், வணிக நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள்,

தொடர்ச்சி..

அரசு அலுவலகங்கள் மற்றும் முக்கிய நோய் பரவக்கூடிய பகுதிகளில் (Hot spot) குழுவாக இணைந்து சிறப்பு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், மொத்தம் 170 DBC பணியாளர்களை 01.04.2025 முதல் 28.06.2025 முடிய 89 நாட்களுக்கு அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட பகுதிகளில் பணிகளை மேற்கொள்ள **பணியமர்த்த வேண்டியது அவசியமாகிறது.**

| வ.எண். | வார்டு அலுவலகம் | வழக்கமன கொசு ஒழிப்புபணி பணியாளர்கள் | விரைவு குழு பணியளர்கள் | மொத்த DBC பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | அஸ்தம்பட்டி | 100 | 70 | 170 |
| | **மொத்தம்** | **100** | **70** | **170** |

எனவே, மேற்கண்ட விபரப்படி 170 மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களை DBC பணியாளர்களாக 01.04.2025 முதல் 28.06.2025 முடிய 89 நாட்களுக்கு அல்லது அதற்கு முன்பாக தேவைப்படும் காலம் வரையிலோ பணியமர்த்தவும், அவர்களுக்கு ஊதியமாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 01.04.2024 முதல் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.473/–வீதம் வழங்கிடவும், ஊதியம், தொழிலாளர் நல வருங்கால வைப்புநிதி (EPF) மற்றும் காப்பீட்டுறுதி சந்தா தொகை (ESI) ஆகியவற்றின் பணி வழங்குவோர் பங்களிப்புத் தொகை ஆகியவை உள்ளடங்கி பணியாளர் ஒருவருக்கு நாள் 1–க்கு ரூ.550/– வீதம் 89 நாட்களுக்கு 170 பணியாளர்களுக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.83.25 இலட்சத்திற்கான செலவினத்தை அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்தின் மூலம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:–
அனுமதிக்கலாம்.
(எப்2/4872/2025)
தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

4) **நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின்** 09.10.2017 **ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நோய்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதமாக ஏடிஸ் கொசுக்களை கட்டுப்படுத்துதல், கொசு புழுக்களை கண்டறிந்து அழித்தல் போன்ற டெங்கு நோய் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்ள** 300 **வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் இம்மாநகராட்சிக்கு மொத்தம்** 700 DBC **பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டிய காலங்களில், நோய் தாக்கத்தின் தன்மைக்கேற்ப தேவையான எண்ணிக்கையில்** DBC **பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு வருகிறது.**

தொடர்ச்சி..

அதன்படி, **சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே** 01.01.2025 முதல் 31.03.2025 முடிய 700 DBC பணியாளர்களை **பணியமர்த்திட மாமன்ற தீர்மானம் எண்**. 580 **நாள்**: 24.12.2024 **ல் அனுமதிக்கப்பட்டு**, 700 **பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு** வருகின்றனர்.

தற்போது கோடை மழை தொடங்கியுள்ளதாலும், கோடைக் காலத்தில் அதிக அளவில் கொள்கலன்களில் நீர் சேமித்து வைக்கப்படுவதாலும், அதிக அளவில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாக வாய்ப்புள்ளது. எனவே, மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்திட **கீழ்கண்ட விபரப்படி அம்மாபேட்டை** வார்டு அலுவலகத்திற்கு 100 எண்ணிக்கையிலான பணியாளர்கள் வழக்கமான தினசரி அட்டவணைப்படி கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளவும், கோட்டத்திற்கு தலா 5 பணியாளர்கள் வீதம் மொத்தம் 80 பணியாளர்களை கொண்டு அமைக்கப்பட்ட 16 விரைவு குழுக்கள் பொது இடங்கள், வணிக நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் முக்கிய நோய் பரவக்கூடிய பகுதிகளில் (Hot spot) குழுவாக இணைந்து சிறப்பு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், மொத்தம் 180 DBC பணியாளர்களை 01.04.2025 முதல் 28.06.2025 முடிய 89 நாட்களுக்கு அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட பகுதிகளில் பணிகளை மேற்கொள்ள **பணியமர்த்த வேண்டியது அவசியமாகிறது**.

| வ.எண். | வார்ட்டு அலுவலகம் | வழக்கமன கொசு ஒழிப்புபணி பணியாளர்கள் | விரைவு குழு பணியளர்கள் | மொத்த DBC பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | அம்மாபேட்டை | 100 | 80 | 180 |
| | **மொத்தம்** | **100** | **80** | **180** |

எனவே, மேற்கண்ட விபரப்படி 180 மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களை DBC பணியாளர்களாக 01.04.2025 முதல் 28.06.2025 முடிய 89 நாட்களுக்கு அல்லது அதற்கு முன்பாக தேவைப்படும் காலம் வரையிலோ பணியமர்த்தவும், அவர்களுக்கு ஊதியமாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 01.04.2024 முதல் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.473/-வீதம் வழங்கிடவும், ஊதியம், தொழிலாளர் நல வருங்கால வைப்புநிதி (EPF) மற்றும் காப்பீட்டுறுதி சந்தா தொகை (ESI) ஆகியவற்றின் பணி வழங்குவோர் பங்களிப்புத் தொகை ஆகியவை உள்ளடங்கி பணியாளர் ஒருவருக்கு நாள் 1-க்கு ரூ.550/- வீதம் 89 நாட்களுக்கு 180 பணியாளர்களுக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.88.11 இலட்சத்திற்கான செலவினத்தை அம்மாபேட்டை வார்டு அலுவலகத்தின் மூலம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**

அனுமதிக்கலாம்.

(எப்2/4873/2025)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

5) **நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின்** 09.10.2017 **ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நோய்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதமாக ஏடிஸ் கொசுக்களை கட்டுப்படுத்துதல், கொசு புழுக்களை கண்டறிந்து அழித்தல் போன்ற டெங்கு நோய் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்ள** 300 **வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் இம்மாநகராட்சிக்கு மொத்தம்** 700 DBC **பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டிய காலங்களில், நோய் தாக்கத்தின் தன்மைக்கேற்ப தேவையான எண்ணிக்கையில்** DBC **பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு வருகிறது.**

**அதன்படி, சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே** 01.01.2025 முதல் 31.03.2025 முடிய 700 DBC பணியாளர்களை **பணியமர்த்திட மாமன்ற தீர்மானம் எண்**. 580 **நாள்**: 24.12.2024 **ல் அனுமதிக்கப்பட்டு**, 700 **பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்**.

தற்போது கோடை மழை தொடங்கியுள்ளதாலும், கோடைக் காலத்தில் அதிக அளவில் கொள்கலன்களில் நீர் சேமித்து வைக்கப்படுவதாலும், அதிக அளவில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாக வாய்ப்புள்ளது. எனவே, மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்திட **கீழ்கண்ட விபரப்படி கொண்டலாம்பட்டி** வார்டு அலுவலகத்திற்கு 100 எண்ணிக்கையிலான பணியாளர்கள் வழக்கமான தினசரி அட்டவணைப்படி கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளவும், கோட்டத்திற்கு தலா 5 பணியாளர்கள் வீதம் மொத்தம் 80 பணியாளர்களை கொண்டு அமைக்கப்பட்ட 16 விரைவு குழுக்கள் பொது இடங்கள், வணிக நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் முக்கிய நோய் பரவக்கூடிய பகுதிகளில் (Hot spot) குழுவாக இணைந்து சிறப்பு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், மொத்தம் 180 DBC பணியாளர்களை 01.04.2025 முதல் 28.06.2025 முடிய 89 நாட்களுக்கு கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட பகுதிகளில் பணிகளை மேற்கொள்ள **பணியமர்த்த வேண்டியது அவசியமாகிறது.**

| **வ.எண்.** | **வார்டு அலுவலகம்** | **வழக்கமன கொசு ஒழிப்புபணி பணியாளர்கள்** | **விரைவு குழு பணியளர்கள்** | **மொத்த DBC பணியாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 1. | கொண்டலாம்பட்டி | 100 | 80 | 180 |
| | **மொத்தம்** | **100** | **80** | **180** |

தொடர்ச்சி..

எனவே, மேற்கண்ட விபரப்படி 180 மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களை DBC பணியாளர்களாக 01.04.2025 முதல் 28.06.2025 முடிய 89 நாட்களுக்கு அல்லது அதற்கு முன்பாக தேவைப்படும் காலம் வரையிலோ பணியமர்த்தவும், அவர்களுக்கு ஊதியமாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 01.04.2024 முதல் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.473/–வீதம் வழங்கிடவும், ஊதியம், தொழிலாளர் நல வருங்கால வைப்புநிதி (EPF) மற்றும் காப்பீட்டுறுதி சந்தா தொகை (ESI) ஆகியவற்றின் பணி வழங்குவோர் பங்களிப்புத் தொகை ஆகியவை உள்ளடங்கி பணியாளர் ஒருவருக்கு நாள் 1–க்கு ரூ.550/– வீதம் 89 நாட்களுக்கு 180 பணியாளர்களுக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.88.11 இலட்சத்திற்கான செலவினத்தை கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்தின் மூலம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:–

அனுமதிக்கலாம்.

(எப்2/4874/2025)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

6) சேலம் மாநகராட்சி 91.34 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 4 மண்டலங்களக செயல்பட்டு வருகிறது. சேலம் மாநகராட்சி பகுதியில் தற்பொழுது 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசித்து வருகின்றனர். சேலம் நகராட்சியாக இருந்தபொழுது 52 நகர சுகாதார செவிலியர் இடங்கள் உருவாக்கப்பட்டன. சேலம் நகராட்சி சேலம் மாநகராட்சியாக தரம் உயர்த்திய பின்பு கிராம பகுதியில் உள்ள 32 துணை சுகாதார நிலைய பகுதிகள் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது. அவ்வாறு இணைக்கப்பட்டுள்ள 32 துணை சுகாதார நிலையங்களுக்கும் தேசிய சுகாதார குழுமம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நகர சுகாதார செவிலியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன.

மேலும் அரசாணை நிலை எண்.299, மக்கள் நல்வாழ்வு துறை நாள்.16.12.2016 ன் படி சேலம் மாநகராட்சியின் கீழ் 16 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும் 16 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை 84 பகுதிகளாக பிரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு மற்றும் மகப்பேறு தாய்மார்களுக்கு மற்றும் குழந்தைகளுக்கு நகர சுகாதார செவிலியர்களை கொண்டு கீழ்காணும் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொடர்ச்சி..

**<u>நகர்ப்புற சுகாதார செவிலியரின் பணிப் பொறுப்புகள்:</u>**

**<u>நகர்ப்புற சுகாதார செவிலியர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது 10,000 முதல் 15,000 மக்கள் தொகைக்கு பின்வரும் சேவைகள் வழங்க வேண்டும்</u>**

1. களப்பணியின் போது கர்ப்பிணி தாய்மார்களுக்கு உடல் பரிசோதனை, எடை மற்றும் உயரம் பார்த்தல் சிறுநீரில் உப்பு, சக்கரை மற்றும் இரத்ததில் ஹிமோகுலோபின் அளவை கணக்கிட்டு பரிசோதனை மேற்கொள்ளுதல்.
2. பிரசவித்த தாய்மார்களை குறைந்தது 5 முறையாவது வீட்டிற்கு சென்று பார்வையிட்டு அவர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்க வேண்டும்.
3. பச்சிளங் குழந்தைகள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்த வேண்டும்.
4. தனக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் உள்ள பள்ளிகளுக்கு சென்று தடுப்பூசி செலுத்துதல், ஊட்டச்சத்து மாத்திரைகள் வழங்கும் பணி மற்றும் பெண் குழந்தைகளுக்கு விழிப்புணர்வு வழங்குதல்.
5. தாய் சேய் மற்றும் சிறுநோய்களுக்கான சிகிச்சை முகாம்கள் அமைக்க வேண்டும்.
6. மகப்பேறு நிதி உதவி திட்ட தரவுகளை தினசரி வலைத்தளத்தில் அனைத்து கர்ப்பிணிகளுக்கும் பதிவேற்றம் செய்ய வேண்டும். மேலும் தினசரி, வார மற்றும் மாத அறிக்கைகளை கணினி மூலம் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
7. பேறுசார் மற்றும் குழந்தை நலத்திட்டத்தை மேம்படுத்த தகவல், கல்வி, தொடர்பு சாதனங்களை (Mobiles & Computers) பயன்படுத்த வேண்டும்.
8. வளர் இளம் பருவ பெண்களுக்கு நலம் மற்றும் ஆற்றுப்படுத்துதல் முகாம்கள் நடைபெறுவதற்கு உதவி செய்ய வேண்டும்.
9. குடும்ப நல தொடர்பான பணியாளர்கள், வளரினம் பெண்கள், தாதியர்கள் சமுதாய மருந்து இருப்பாளர்கள் ஆகியவர்களுக்கு பயிற்சி மற்றும் நலக் கல்வி அளிக்க வேண்டும்.
10. தனது பகுதிக்குட்பட்ட அனைத்து குடும்பங்களின் விவரங்களை சேகரித்து பதிவேடுகளில் பதிவிட வேண்டும்.
11. அவர்களது பகுதியில் பிறப்பு, இறப்பு பதிவுகளை பராமரிக்கவும் வேண்டும் (Family Registers).
12. பேரிடர் காலங்களில் அனைத்து அத்தியாவசிய சுகாதார களப்பணிகளிலும் முக்கிய பங்காற்ற வேண்டும்.
13. தொற்று நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டும். காய்ச்சல், வயிற்றுப்போக்கு உள்ளிட்ட தொற்று நோய் பாதிப்பு ஏற்படும் போது (Outbreaks) காய்ச்சல் முகாம்களை நடத்துதல், வீடு வீடாக நோயாளிகளை கண்டறிதல் அவர்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்குதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
14. காச நோய், தொழு நோய் மற்றும் எச்ஐவி உள்ளிட்ட அபாயகரமான தொற்றுநோய் அறிகுறிகள் கொண்டவர்களை கண்டறிந்து பரிசோதனை மற்றும் மேல் சிகிச்சைக்கு பரிந்துரைக்க வேண்டும்.

தொடர்ச்சி..

15. தொற்றா நோய்களை கட்டுப்படுத்தும் முகாம்களில் பங்கேற்க வேண்டும். கர்ப்பப்பை வாய் புற்றுநோய் மற்றும் மார்பக புற்றுநோய்களை கண்டறிய வேண்டும்.
16. அனைத்து பணிக்கான நாட்குறிப்பு, குறிப்பேடு மற்றும் பதிவேடுகளை பரிந்துரைக்கப்பட்டவாறு முறையாக பராமரிக்க வேண்டும்.

சேலம் மாநகராட்சியில் அனுமதிக்கப்பட்ட 52 நகர சுகாதார செவிலியர்கள் பணியிடங்களில் தற்பொழுது 17 நகர சுகாதார செவிலியர் பணியிடங்களில் மட்டுமே பணியில் உள்ளனர். அவ்வாறு பணிபுரியும் நகர சுகாதார செவிலியர்களுக்கு சேலம் மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்பட்டு அதனை URS நிதியின் கீழ் முறையான முன்மொழிதல் அனுப்பி மக்கள் நல்வாழ்வு துறையிடம் நிதி பெற்று ஈடுசெய்து வருகிறோம். மேற்கண்ட 52 பணியிடங்களில் 17 பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன, மீதம் உள்ள 35 பணியிடங்கள் காலியாக உள்ளது.

மேற்கண்ட **35** காலி பணியிடங்களுக்கு தேசிய சுகாதார குழுமத்தால் நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியத்தினை கணக்கில் கொண்டு ஒரு வருடத்திற்கான செலவினம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **பதவியின் தன்மை** | **தேவையான பணியாளர்கள் எண்ணிக்கை** | **மாதாந்திர ஊதியம் ரூ.** | **EPF (Gov Con 13%)** | **ESI** | **நிகர ஊதியம் (4+5+6)** | **மாதாந்திர ஊதியம் With EPF & ESI (7*3)** |
|---|---|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** |
| 1 | நகர சுகாதார செவிலியர் | 35 | 14000 | 1820 | 455 | 16275 | 569625 |

மேற்படி காலிப்பணியிடங்களை ஒரு வருட காலம் பணியமர்த்த மாநகராட்சிக்கு ரூ.68,35,500/- தொகை தேவைப்படுகிறது. மேற்கண்ட காலிப்பணியிடங்களை வெளி ஆதார முறையில் மாநகராட்சி நிரப்பிக்கொள்ளவும் அதற்கான செலவினங்களை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

அனுமதிக்கலாம்.

(எப்3/7813 /2022)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

7) <u>திருமதி மா. சாரதாதேவி, துணைமேயர் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ல் உள்ள சக்தி நகர் முதல் குயின் சர்க்கிள் வரை உள்ள ஓடை சுத்தம் செய்து அந்த ஓடையை அகலப்படுத்தியும் மற்றும் கான்கிரீட் சாக்கடை அமைத்து தருமாறு பொதுமக்கள் கேட்டதற்கிணங்க அந்த ஓடையை மிக விரைவில் சரிசெய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

8) <u>திருமதி மா. சாரதாதேவி, துணைமேயர் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ல் எஸ்.பி.பங்களா பின்புறம் உள்ள சக்திநகர் தெருவில் சாக்கடை வசதி மற்றும் தார்சாலை வசதி இல்லாமல் மக்கள் மிகவும் சிரமம்படுகின்றனர். எனவே, பொதுமக்கள் கேட்டதற்கிணங்க அந்த தெருவிற்கு மிக விரைவில் சாக்கடை வசதி மற்றும் தார்சாலை வசதி செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

9) <u>திருமதி மா. சாரதாதேவி, துணைமேயர் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ல் எஸ்.பி.பங்களா பின்புறம் உள்ள கம்பர் தெருவிற்கு சாக்கடை வசதி மற்றும் தார்சாலை வசதி இல்லாமல் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, பொதுமக்கள் கேட்டதற்கிணங்க அந்த தெருவிற்கு மிகவிரைவில் சாக்கடை வசதி மற்றும் தார்சாலை வசதி செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

10) <u>36வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. நா.யாதவமூர்த்தி அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 36வது கோட்டத்தில் கீழ்கண்ட பணிகள் விவரப்படியான பணிகள் செய்தல்.

1. தாதம்பட்டி பெரியண்ண உடையார் தெரு, ஏரி வீதி ஆகிய இரண்டு தெருக்களையும் கான்கிரீட் சாலைகளாக அமைத்தல். (மண்சாலைகளாக உள்ளது)
2. தாதம்பட்டி அண்ணா நகர் இரண்டு குறுக்கு தெருக்களை கான்கிரீட் சாலைகளாக அமைத்தல் (மண் சாலைகளாக உள்ளது)
3. தாதம்பட்டி பிரிவு மேகலாநகர் சாக்கடை கால்வாய் அமைத்தல். (கட்சா சாக்கடையாக உள்ளது)
4. தாதம்பட்டி கன்னடியர் தெரு குறுக்கு கான்கிரீட் சாலையாக அமைத்தல். (மண்சாலையாக உள்ளது)
5. கொய்யாதோப்பு குறுக்கு தெருக்கள் இரண்டு தெருக்கள் சாக்கடை வசதி அமைத்தல்.
6. NGGO காலனி 3வது கிராஸ் ல் 110 மீட்டர் அளவிற்கு சாக்கடை கால்வாய் அமைத்தல்.

மேற்கண்ட பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

11) <u>36வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. நா.யாதவமூர்த்தி அவர்களின் தீர்மானம்</u>

தாதம்பட்டி ஏரியில் அல்லிகுட்டை புனரமைப்பு திட்டத்தின் கீழ் சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் அதன் கட்சா சாக்கடை கால்வாய் ஒரு பகுதி சீரமைப்பிற்கு சுமார் 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டும் அப்பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது. இந்த ஊர் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் (ரிவால் வேஷன் கேட்) சுழலும் கேட் அமைத்து காலையில் திறந்து இரவில் மூடும் வகையில் அமைத்து தர பொதுமக்களின் சார்பில் மாமன்ற உறுப்பினரால் கேட்டுக் கொள்ளப்பட்டு கேட் அமைத்து கொடுக்கப்பட்டது. ஆனால் அதற்கான பாதை ஏதும் அமைக்கவில்லை. எனவே, அமைத்து அவ்வழியாக பொதுமக்கள் செல்லும் வகையில் பாதை அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

12) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. மா. திருஞானம் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 37வது வார்டு பகுதியில் உள்ள கலைஞர் நெசவாளர் காலனியில் (நாமமலை அடிவாரம்) பகுதியில் சுமார் 300 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்த பகுதியில் சாக்கடை வசதி இல்லாமல் கழிவு அனைத்தும் சாலையில் இருபுறமும் செல்வதால் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளுக்கு நோய் ஏற்படும் நிலை உள்ளது. எனவே, இந்த பகுதியில் கழிவுநீர் கால்வாய் அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

13) **39வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி மா.ஜெயந்தி அவர்களின் தீர்மானம்**

1. சேலம் மாநகராட்சி 39வது கோட்டத்தில் திரு.வி.க. ரோட்டில் அமைந்துள்ள அருள்மிகு பலப்பட்டரை மாரியம்மன் திருக்கோயில் கடந்த 22 ஆண்டுகளாக திருப்பணி நடைபெறாமல் இருந்து, தற்சமயம் இக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்துவதற்கான வேலைகள் நடந்து வருகின்றன. மழைகாலங்களில் கோவிலுக்கு முன்புறம் உள்ள சாக்கடை கால்வாயில் இருந்து மழைநீர் கோயிலுக்குள் வந்து விடுவதால் பக்தர்கள் கோவிலுக்கு வருவதற்கு மிகவும் சிரமம் படுகின்றனர். ஆதலால் பொதுமக்கள், பக்தர்கள் நலன் கருதி, முன்னுரிமை கொடுத்து திரு.வி.க.ரோட்டில் புதியதாக சாக்கடை கால்வாயும், கோவிலுக்கு பின்புறம் உள்ள சவுண்டம்மன் கோயில் தெரு, பெரிய கிணறு தெரு, சாக்கடை கால்வாயும் புதியதாக அமைத்தல்.
    1. திரு.வி.க. ரோடு.
    2. சவுண்டம்மன் கோயில் தெரு
    3. பெரிய கிணறு தெரு
2. 39வது கோட்டத்திற்கு புதியதாக வார்டு அலுவலகம் அமைத்தல்.
3. குமரகிரி ஏரிக்கரையில் அமைந்துள்ள சமயபுரம் மாரியம்மன் கோயிலுக்கு முன் ஒரு சிறிய கல்வெட்டு அமைத்தல்.
4. 39வது கோட்டத்தில் நெசவாளர்கள் அதிகம் வசிப்பதால், ஏழை மாணவர்கள் அறிவு திறனை பெருக்குவதற்கு ஒரு நூலகம் அல்லது அறிவு சார்வு மையம் அமைத்தல்.
5. 39வது கோட்டத்தில் பசுபல குருநாதன் தெருவில் உள்ள நகரவை துவக்கப்பள்ளிக்கு ஒரு ஸ்மார்ட் கிளாஸ் மற்றும் படிகட்டுக்கு கேட் மற்றும் கிரில் தேவைப்படுகிறது. குழந்தைகளின் நலன் கருதி உடனடியாக செய்தல்.
6. பூவாத்தாள் தெருவிற்கு சாக்கடை 300 மீட்டருக்கு அமைத்தல்.
7. வையாபுரி தெருவில் உள்ள நகரவை உயர்நிலைப்பள்ளிக்கு தேவையானவற்றை உடனடியாக குழந்தைகள் நலன் கருதி செய்தல்.
8. சலவைதுறையில் மீதமுள்ள பணிகள் செய்யாமல் உள்ளது. ஆகையால் அச்சமூக மக்கள் வாழ்வாதாரம் இன்றி மிகவும் சிரமப்படுகின்றனர்.

    1. தரைதளம், 2. துணி வைப்பதற்கு ஸ்டாக் ரூம், 3. கழிப்பிட வசதி ஆகியவற்றை முன்னுரிமை கொடுத்து செய்தல்.

    மேற்கண்ட பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

    தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

14) சேலம் மாநகராட்சி 2024 – 2025 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ், சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட கோட்டம் எண் 3 ல் திருமலை நகர், ஊத்துக்கிணறு, ஸ்ரீ நகர், K.S.V நகர், பனங்காடு மற்றும் சக்தி காளியம்மன் கோவில் சந்து ஆகிய பகுதிகளில் தெருவிளக்கு இல்லாத மின்வாரிய மின்கம்பங்களில் புதியதாக 50 எண்ணிக்கையிலான 60 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள், கிளாம்ப் செட், பைப் மற்றும் இதர தேவையான மின்உபகரணங்களுடன் புதியதாக அமைக்கும் பணிக்கு 2024 – 2025 ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,30,000/– ற்கு **14.10.2024** ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில், மேற்படி பணிக்கு **27.02.2025** ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் தன்மை (மதிப்பீடு தொகைக்கு) | முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் பி. லிட், சென்னை | **0.95% குறைவு (ரூ.3,50,025.00)** | DD. Rs.4,300/- DD No.000870 Axis Bank /Date :27.02.2025 |
| 2 | மெசர்ஸ். அபி எனர்ஜி பிரைவேட் லிமிடேட், சென்னை. | **0.93% அதிகம் (ரூ.3,58,700.00)** | DD. Rs.4,300/- DD No.145569 Axis Bank/Date :26.02.2025 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகைக்கு 0.95% குறைவான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வழங்கிய மெசர்ஸ். ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் பி. லிட், சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.3,50,025.00/- ஐ ஏற்று ஒப்புக்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை அரசாணை (MS) எண். 158 நாள்.02.11.2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி 248 Table – II ன் படி, மேற்கண்ட பணிக்கு மெசர்ஸ். ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் பி. லிட், சென்னை அவர்களுக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பணிக்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ7/18/Ele/2024-25)**

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

15) சேலம் மாநகராட்சி 2024 - 2025 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட கோட்டம் எண் 8 ல் மூக்கனேரி, காமாட்சி நகர், குருக்கள் காலனி, NGGO காலனி அனெக்ஸ், சீனிவாசா நகர், பங்களா தெரு, முல்லை நகர், நித்யா நகர், சேரன் தெரு, லட்சுமி நகர் மற்றும் ஐஸ்வர்யா கார்டன் ஆகிய பகுதிகளில் தெருவிளக்கு இல்லாத மின்வாரிய மின்கம்பங்களில் புதியதாக 20 எண்ணிக்கையிலான 60 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள், கிளாம்ப் செட், பைப் மற்றும் இதர தேவையான மின்உபகரணங்களுடன் புதியதாக அமைக்கும் பணிக்கு 2024 - 2025 ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,85,000/- ற்கு **02.01.2025** ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில், மேற்படி பணிக்கு **27.02.2025** ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் தன்மை (மதிப்பீடு தொகைக்கு) | முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் பி. லிட், சென்னை | **1.13%** குறைவு **(ரூ.1,52,600.00)** | DD. Rs.1,850/- DD No.000871 Axis Bank /Date :27.02.2025 |
| 2 | மெசர்ஸ். அபி எனர்ஜி பிரைவேட் லிமிடேட், சென்னை. | **1.27%** அதிகம் **(ரூ.1,56,300.00)** | DD. Rs.1,850/- DD No.145570 Axis Bank/Date :26.02.2025 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகைக்கு 1.13% குறைவான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வழங்கிய மெசர்ஸ். ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் பி. லிட், சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,52,600.00/- ஐ ஏற்று ஒப்புக்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை அரசாணை (MS) எண். 158 நாள்.02.11.2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி 248 Table – II ன் படி, மேற்கண்ட பணிக்கு மெசர்ஸ். ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் பி. லிட், சென்னை அவர்களுக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பணிக்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ7/244/Ele/2024-25)**

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

16) சேலம் மாநகராட்சி 2024 – 2025 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ், அம்மாப்பேட்டை வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட கோட்டம் எண் 35 ல் ஆட்சி முத்து தெரு, சங்கரன் தெரு, கிருஷ்ணன் புதூர், ஆதி செல்வன் தெரு, கனக சபாபதி தெரு, ஆதி செல்வ கணபதி தெரு, நஞ்சம்பட்டி காலனி மற்றும் கந்தப்பன் தெரு ஆகிய பகுதிகளில் தெருவிளக்கு இல்லாத மின்வாரிய மின்கம்பங்களில் புதியதாக 20 எண்ணிக்கையிலான 60 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள், கிளாம்ப் செட், பைப் மற்றும் இதர தேவையான மின்உபகரணங்களுடன் புதியதாக அமைக்கும் பணிக்கு 2024 – 2025 ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,80,000/– ற்கு **02.01.2025** ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில், மேற்படி பணிக்கு **27.02.2025** ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் தன்மை (மதிப்பீடு தொகைக்கு) | முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் பி. லிட், சென்னை | **1.08%** குறைவு (ரூ.**1,49,000.00**) | DD. Rs.1,800/- DD No.000872 Axis Bank /Date :27.02.2025 |
| 2 | மெசர்ஸ். அபி எனர்ஜி பிரைவேட் லிமிடேட், சென்னை. | **1.91%** அதிகம் (ரூ.**1,53,500.00**) | DD. Rs.1,800/- DD No.145571 Axis Bank/Date :26.02.2025 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகைக்கு 1.08% குறைவான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வழங்கிய மெசர்ஸ். ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் பி. லிட், சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,49,000.00/- ஐ ஏற்று ஒப்புக்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை அரசாணை (MS) எண். 158 நாள்.02.11.2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி 248 Table – II ன் படி, மேற்கண்ட பணிக்கு மெசர்ஸ். ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் பி. லிட், சென்னை அவர்களுக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பணிக்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ7/442/Ele/2024-25)**

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

**17)** சேலம் மாநகராட்சி **2024–25** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ், அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண். **33–**இல் நெ. **1** புது தெரு மற்றும் தம்பிகாளியம்மன் கோயில் தெரு மழைநீர் வடிகால் மிகவும் சிதலமடைந்து, குடியிருப்புகளில் இருந்து வரும் கழிவுநீர் சாலையில் தேங்கி நின்று உள்ளதால் கொசு உற்பத்தியாகி பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு உண்டாகிறது. எனவே பொது மக்களின் சுகாதார நலன் கருதி நெ. **1** புது தெரு மற்றும் தம்பி காளியம்மன் கோயில் தெருவில் புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணியினை மேற்கொள்ள **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலைவிகித பட்டியல்படி மதிப்பீடு தொகை ரூ. **39.20/–** இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், தொழில்நுட்ப அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்கான செலவினம் 2024–25ஆம் ஆண்டு பொது நிதி அல்லது அரசு மான்யம் இருந்து மேற்கொள்ளலாம்

**(இ8/ம.எண். 471 டி /2024–25)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

**18)** சேலம் மாநகராட்சி **2024–25** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ், அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண். **43–**இல் சன்னியாசிகுண்டு எக்ஸ்டென்சன் தெற்கு குறுக்கு (தனசிவா மண்டபம் ரோடு) பகுதியில் மழைநீர் வடிகால் மிகவும் சிதலமடைந்து, குடியிருப்புகளில் இருந்து வரும் கழிவுநீர் சாலையில் தேங்கி நின்று உள்ளதால் கொசு உற்பத்தியாகி பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு உண்டாகிறது. எனவே பொது மக்களின் சுகாதார நலன் கருதி சன்னியாசிகுண்டு எக்ஸ்டென்சன் தெற்கு குறுக்கு தெருவில் (தனசிவா மண்டபம் ரோடு) புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணியினை **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலைவிகித பட்டியல்படி மதிப்பீடு தொகை ரூ. **46.00/–** இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், தொழில்நுட்ப அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்கான செலவினம் 2024–25ஆம் ஆண்டு பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

**(இ8/ம.எண். 466டி /2024–25)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

**19)** சேலம் மாநகராட்சி **2024–25** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ், அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண். **42**–இல் அறிஞர் அண்ணா தெரு பகுதியில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் கான்கிரீட்தளம் அமைக்கும் பணியினை **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலைவிகித பட்டியல்படி தொழில்நுட்ப அங்கீகாரத்துடன் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. **40.00/–** இலட்சத்தில் மேற்கொள்ள, பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியை பெற்று மேற்படி தொகைக்கு நிர்வாக அனுமதியும், அதன் பேரில் இரண்டாம் முறையாக **19.03.2025**ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. மேற்படி தேதியில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| **1** | **திரு. டி. வைத்தி (L1)** | **ரூ. 33,32,297/–** | **0.02%** மதிப்பீட்டை விட குறைவு | e Procurement Ref.No 6336081272276, ரூ. 40,000/- UTR No. CPAEXTQOV3 நாள். 17.03.2025/SBI Bank |
| 2 | மெசர்ஸ். ஸ்ரீ வைத்தீஸ்வரா & கோ (L2) | ரூ. 33,66,733/– | 1.01% மதிப்பீட்டை விட அதிகம் | e Procurement Ref.No 6336081272285, ரூ. 40,000/- UTR No. CPAEXTQYE9 நாள். 17.03.2025/SBI Bank |

மேற்காணும் பணியை நிறைவேற்ற வரிசை எண். **1**–இல் கண்டுள்ள திரு. டி. வைத்தி, சேலம் (L1) என்ற ஒப்பந்ததாரர் ரூ. **33,32,297/–** என மதிப்பீட்டை விட 0.02% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ8/ம.எண். 444டி /2024–25)**

**தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.**

20) தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 அத்தியாயம் (V) சட்டம் பிரிவு 62 (1) (a) மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் (VI) பகுதி–1 விதி 233 (2) –ன் படி மாநகராட்சியில் வசூலிக்கப்படும் வரிகள், கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் ஆகிய அனைத்து வருவாய்கள் மூலம் மாநகராட்சியால் பெறப்பட்ட பணம் ஆகியவை பொது நிதியில் வரவு வைக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதின் அடிப்படையில், தற்போது சேலம் மாநகராட்சியில் தொழில்வரிக்காக வசூலிக்கப்படும் தொகை இம்மாநகராட்சி பொது நிதியில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

சேலம் நகராட்சியாக செயல்பட்டு வந்த போது, நகராட்சி பள்ளிகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கும் பொருட்டு, நகராட்சியில் வசூலிக்கப்படும் தொழில்வரித்தொகையில் 25 சதவிகிதம் தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து ஊதியமாக வழங்க நகர்மன்றத்தின் அனுமதி பெற்று ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது அனைத்து அரசு ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி அனைத்தும் கல்வி நிறுவனங்களும் கல்வித்துறை கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. கல்வித்துறையின் கருவூலத்தில் ஆசியர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. சேலம் மாநகராட்சியில் தற்போதும், வசூலிக்கப்படும் தொழில்வரித் தொகையில் 25 சதவிகிதம் தொகை கல்வி நிதிக் கணக்கிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

எனவே, கல்விநிதியின் கீழ் போதுமான நிதியிருப்பு உள்ளதால், சேலம் மாநகராட்சியில் வசூலிக்கப்படும் தொழில்வரித் தொகையில் 25 சதவிகிதம் தொகையை கல்விநிதிக்கு ஒதுக்கீடு செய்யாமல், வசூலிக்கப்படும் தொழில்வரித்தொகை முழுவதும் பொதுநிதி கணக்கில் வரவு வைக்கவும், UTIS மென் பொருளில் தகுந்த மாற்றங்களை ஏற்படுத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 அத்தியாயம் (V) சட்டம் பிரிவு 62 (1) (a) மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் (VI) பகுதி–1 விதி 233 (2) –ன் படி சேலம் மாநகராட்சியில் வசூலிக்கப்படும் தொழில்வரித்தொகை முழுவதும் பொதுநிதியில் வரவு வைக்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

(அ1/ 5134 /2025)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**21)** **2024–2025**ஆம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை மான்ய நிதியின் (O &M Deficit Grant Fund) கீழ், சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தில் தொட்டில்பட்டியில் உள்ள சுத்திகரிக்கப்பட்ட நீரேற்று நிலையத்தினை மேம்படுத்தும் பணியை ரூ.**4.60/–** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான மறுஒப்பந்தப்புள்ளி அழைப்பு **20.03.2025** அன்று கோரப்பட்டது.

மேற்காணும் பணிக்கு **20/03/2025** அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் பின்வருமாறு:

1. M/s. D.Kamaraj, Salem
2. M/s. S.R.Construction, Salem.

மேற்தெரிவித்துள்ளவாறு **20.03.2025** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீதான தொழில் நுட்ப கூர்ந்தாய்வு குழு கூட்ட **20.03.2025**ம் தேதிய அறிக்கையில் வரப்பெற்ற **2** ஒப்பந்தப்புள்ளிகளும் முழுமையான தொழில் நுட்ப தகுதி உடையதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கூர்ந்தாய்வு குழு கூட்ட அறிக்கையின்படி தகுதியான ஒப்பந்ததாரரின் விலை குறித்த ஒப்பந்தப்புள்ளிகள் **25.03.2025**ம் தேதியன்று திறக்கப்பட்டு அசல் மதிப்பீட்டுடன் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.) | விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1. | **M/s. D.Kamaraj, Salem** | ரூ.3,80,96,823/– | 0.24% குறைவு |
| 2. | M/s. S.R.Construction, Salem. | ரூ.3,83,06,765/– | 0.31% அதிகம் |

மேற்காணும் (L1) ஒப்பந்ததாரர் M/s.D.Kamaraj, Salem, ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக வழங்கிய தொகை ரூ.**3,80,96,823/–**னை (ரூபாய் மூன்று கோடியே என்பது இலட்சத்து தொன்னூற்று ஆறாயிரத்து என்னூற்று இருபத்து மூன்று மட்டும்) ஏற்றுக்கொள்ளலாம்.

எனவே, சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தில் தொட்டில்பட்டியில் உள்ள சுத்திகரிக்கப்பட்ட நீரேற்று நிலையத்தினை மேம்படுத்தும் பணியை (ரூ.**3,80,96,823/–**) M/s.D.Kamaraj, Salem ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அனுமதிக்கலாம்.

**(இ2 / ம.எண்.7716–3/குநீ /2024–25)**

**தீர்மானம்.** அனுமதிக்கப்பட்டது.

**22)** **2024–2025**ஆம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை மான்ய நிதியின் (O &M Deficit Grant Fund) கீழ், சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தின் **155** MLD திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை மேம்படுத்தும் பணியை ரூ.**1.60/–** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான மறுஒப்பந்தப்புள்ளி அழைப்பு **20.03.2025** அன்று கோரப்பட்டது.

மேற்காணும் பணிக்கு **20/03/2025** அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் பின்வருமாறு:

1. M/s.KSP & Co., Mettur.
2. M/s. Classic Engineering Enterprise, Coimbatore.

மேற்தெரிவித்துள்ளவாறு **20.03.2025** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீதான தொழில் நுட்ப கூர்ந்தாய்வு குழு கூட்ட **20.03.2025**ம் தேதிய அறிக்கையில் வரப்பெற்ற **2** ஒப்பந்தப்புள்ளிகளும் முழுமையான தொழில் நுட்ப தகுதி உடையதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கூர்ந்தாய்வு குழு கூட்ட அறிக்கையின்படி தகுதியான ஒப்பந்ததாரரின் விலை குறித்த ஒப்பந்தப்புள்ளிகள் **25.03.2025**ம் தேதியன்று திறக்கப்பட்டு அசல் மதிப்பீட்டுடன் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.) | விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1. | **M/s. KSP & Co., Mettur.** | ரூ.1,33,63,600/– | 0.08% குறைவு |
| 2. | M/s. Classic Engineering Enterprise, Coimbatore. | ரூ.1,35,55,000/– | 1.35% அதிகம் |

மேற்காணும் (L1) ஒப்பந்ததாரர் M/s. KSP & Co., Mettur, ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக வழங்கிய தொகை ரூ.**1,33,63,600/–**னை (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து மூன்று இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து அறுநூறு மட்டும்) ஏற்றுக்கொள்ளலாம்.

எனவே, சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தில் **155** MLD திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை மேம்படுத்தும் பணியை (ரூ.**1,33,63,600/–**) M/s. KSP & Co., Mettur ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :–</u>

அனுமதிக்கலாம்.

**(இ2 / ம.எண்.7716–2/குநீ /2024–25)**

**தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.**

**23)** **2024–2025**ஆம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை மான்ய நிதியின் (O &M Deficit Grant Fund) கீழ், சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தின் சேலம் மாநகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் தனிக்குடிநீர்த் திட்டத்தில் தொட்டில்பட்டியில் அமைந்துள்ள சுத்திகரிக்கப்படாத நீரேற்று நிலையத்தினை மேம்படுத்தும் பணியை ரூ.**4.24/–** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான மறுஒப்பந்தப்புள்ளி அழைப்பு **20.03.2025** அன்று கோரப்பட்டது.

மேற்காணும் பணிக்கு **20/03/2025** அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் பின்வருமாறு:

1. M/s. D.Kamaraj, Salem
2. M/s. S.R.Construction, Salem.

மேற்தெரிவித்துள்ளவாறு **20.03.2025** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீதான தொழில் நுட்ப கூர்ந்தாய்வு குழு கூட்ட **20.03.2025**ம் தேதிய அறிக்கையில் வரப்பெற்ற **2** ஒப்பந்தப்புள்ளிகளும் முழுமையான தொழில் நுட்ப தகுதி உடையதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கூர்ந்தாய்வு குழு கூட்ட அறிக்கையின்படி தகுதியான ஒப்பந்ததாரரின் விலை குறித்த ஒப்பந்தப்புள்ளிகள் **25.03.2025**ம் தேதியன்று திறக்கப்பட்டு அசல் மதிப்பீட்டுடன் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.) | விலை விகிதம் % |
|---|---|---|---|
| 1. | **M/s. D.Kamaraj, Salem** | ரூ.3,51,50,483/– | 0.24% குறைவு |
| 2. | M/s. S.R.Construction, Salem. | ரூ.3,57,07,272/– | 1.34% அதிகம் |

மேற்காணும் (L1) ஒப்பந்ததாரர் M/s. . D.Kamaraj, Salem ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக வழங்கிய தொகை ரூ.**3,51,50,483/–**னை (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்தோரு இலட்சத்து ஐம்பதாயிரத்து நாநூற்று என்பத்து மூன்று மட்டும்) ஏற்றுக்கொள்ளலாம்.

எனவே, சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தில் தொட்டில்பட்டியில் அமைந்துள்ள சுத்திகரிக்கப்படாத நீரேற்று நிலையத்தினை மேம்படுத்தும் பணியை (ரூ.**3,51,50,483/–**) D.Kamaraj, Salem ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :–</u>

அனுமதிக்கலாம்.

**(இ2 / ம.எண்.7716–1/குநீ /2024–25)**

**தீர்மானம்.** அனுமதிக்கப்பட்டது.

**24)** சேலம் மாநகராட்சி **2024–25**ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ், கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண். **53,54,56,57,58,59,60** ஆகிய மொத்தம் 7 கோட்டங்களில் உள்ள பொதுமக்களது அன்றாட தண்ணீர் தேவையை அந்தந்த கோட்டங்களில் உள்ள **318** ஆழ்துளை கிணறுகளுடன் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள், ஏர் கம்ப்ரசர்கள், நீர்மூழ்கி மின் மோட்டார்கள், **361** HDPE Tanks, திறந்தவெளி கிணறு மோட்டார்கள், OHT Pumping Motor, கல்வி அலுவலக மோட்டார்கள் மற்றும் சுகாதார நிலைய மோட்டார்கள் எனவும் உள்ளடக்கி உள்ளது.

எனவே, மேற்கண்ட **7** கோட்டங்களில் உள்ள மொத்த மின் மோட்டார்கள், ஏர்கம்பரசர்கள் மற்றும் நீர் மூழ்கி மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஆறுமாதங்கள் ரூ.**22.10/–** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களின் அன்றாட அத்தியாவசிய தண்ணீர் பிரச்னைகளை கருதி, ஆறு மாதங்கள் வரை நீர் மூழ்கி மின் மோட்டார்கள் மற்றும் ஏர் கம்பரசர் மோட்டார்களை பழுதுபார்த்து பராமரிப்பு பணிகளை ரூ.**22.10/–** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை **2024–25**ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2/ம.எண். 624/கு. நீ/2024–25)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

**25)** சேலம் மாநகராட்சி **2024–25**ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ், கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண். **45,46,47,48,49,50,51,52,55** ஆகிய மொத்தம் **9** கோட்டங்களில் உள்ள பொதுமக்களது அன்றாட தண்ணீர் தேவையை அந்தந்த கோட்டங்களில் உள்ள **322** ஆழ்துளை கிணறுகளுடன் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள், ஏர் கம்ப்ரசர்கள், நீர்மூழ்கி மின் மோட்டார்கள், **399** HDPE Tanks, திறந்தவெளி கிணறு மோட்டார்கள், OHT Pumping Motor, கல்வி அலுவலக மோட்டார்கள் மற்றும் சுகாதார நிலைய மோட்டார்கள் எனவும் உள்ளடக்கி உள்ளது.

எனவே, மேற்கண்ட **9** கோட்டங்களில் உள்ள மொத்த மின் மோட்டார்கள், ஏர்கம்பரசர்கள் மற்றும் நீர் மூழ்கி மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஆறுமாதங்கள் ரூ.**22.40/–** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களின் அன்றாட அத்தியாவசிய தண்ணீர் பிரச்னைகளை கருதி, ஆறு மாதங்கள் வரை நீர் மூழ்கி மின் மோட்டார்கள் மற்றும் ஏர் கம்பரசர் மோட்டார்களை பழுதுபார்த்து பராமரிப்பு பணிகளை ரூ.**22.40/–** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை **2024–25**ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2/ம.எண். 625/கு. நீ/2024–25)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

**26)** சேலம் மாநகராட்சி 2024–25ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ், சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண். 22,23,24,25,26,27,28 ஆகிய மொத்தம் 7 கோட்டங்களில் உள்ள பொதுமக்களது அன்றாட தண்ணீர் தேவையை அந்தந்த கோட்டங்களில் உள்ள 323 ஆழ்துளை கிணறுகளுடன் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள், ஏர் கம்ப்ரசர்கள், நீர்மூழ்கி மின் மோட்டார்கள், HDPE Tanks, திறந்தவெளி கிணறு மோட்டார்கள், OHT Pumping Motor, கல்வி அலுவலக மோட்டார்கள் மற்றும் சுகாதார நிலைய மோட்டார்கள் எனவும் உள்ளடக்கி உள்ளது.

எனவே, மேற்கண்ட 7 கோட்டங்களில் உள்ள மொத்த மின் மோட்டார்கள், ஏர்கம்பரசர்கள் மற்றும் நீர் மூழ்கி மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஆறுமாதங்கள் ரூ.22.50/– இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களின் அன்றாட அத்தியாவசிய தண்ணீர் பிரச்னைகளை கருதி, ஆறு மாதங்கள் வரை நீர் மூழ்கி மின் மோட்டார்கள் மற்றும் ஏர் கம்பரசர் மோட்டார்களை பழுதுபார்த்து பராமரிப்பு பணிகளை ரூ.22.50/– இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை 2024–25ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2/ம.எண். 35/கு. நீ/2024–25)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

**27)** சேலம் மாநகராட்சி 2024–25ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ், சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண். 1,2,3,18,19,20,21 ஆகிய மொத்தம் 7 கோட்டங்களில் உள்ள பொதுமக்களது அன்றாட தண்ணீர் தேவையை அந்தந்த கோட்டங்களில் உள்ள 287 ஆழ்துளை கிணறுகளுடன் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள், ஏர் கம்ப்ரசர்கள், நீர்மூழ்கி மின் மோட்டார்கள், HDPE Tanks, திறந்தவெளி கிணறு மோட்டார்கள், OHT Pumping Motor, கல்வி அலுவலக மோட்டார்கள் மற்றும் சுகாதார நிலைய மோட்டார்கள் எனவும் உள்ளடக்கி உள்ளது.

எனவே, மேற்கண்ட 7 கோட்டங்களில் உள்ள மொத்த மின் மோட்டார்கள், ஏர்கம்பரசர்கள் மற்றும் நீர் மூழ்கி மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஆறுமாதங்கள் ரூ.20.00/– இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களின் அன்றாட அத்தியாவசிய தண்ணீர் பிரச்னைகளை கருதி, ஆறு மாதங்கள் வரை நீர் மூழ்கி மின் மோட்டார்கள் மற்றும் ஏர் கம்பரசர் மோட்டார்களை பழுதுபார்த்து பராமரிப்பு பணிகளை ரூ.20.00/– இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை 2024–25ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2/ம.எண். 36/கு. நீ/2024–25)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

**28)** சேலம் மாநகராட்சி 2024–25ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண். 4,5,6,7,8,12,13,14,15,16,17,29,30 மற்றும் 31 ஆகிய மொத்தம் 14 கோட்டங்களில் உள்ள பொதுமக்களது அன்றாட தண்ணீர் தேவையை அந்தந்த கோட்டங்களில் உள்ள 295 எண்ணிக்கையிலான கம்ப்ரசர் மின் மோட்டார்களும், 134 எண்ணிக்கையிலான நீர்மூழ்கி மோட்டார்களும் மொத்தம் உள்ள 429 ஆழ்துளை கிணறு, திறந்தவெளி கிணறு மோட்டார்கள், OHT Pumping Motor, கல்வி அலுவலக மோட்டார்கள் மற்றும் சுகாதார நிலைய மோட்டார்கள் எனவும் உள்ளடக்கி உள்ளது.

எனவே, மேற்கண்ட 14 கோட்டங்களில் உள்ள மொத்த மின் மோட்டார்கள், ஏர்கம்பரசர்கள் மற்றும் நீர் மூழ்கி மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஆறுமாதங்கள் ரூ.29.90/– இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களின் அன்றாட அத்தியாவசிய தண்ணீர் பிரச்னைகளை கருதி, ஆறு மாதங்கள் வரை நீர் மூழ்கி மின் மோட்டார்கள் மற்றும் ஏர் கம்பரசர் மோட்டார்களை பழுதுபார்த்து பராமரிப்பு பணிகளை ரூ.29.90/– இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை 2024–25ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2/ம.எண். 259/கு. நீ/2024–25)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

**29)** சேலம் மாநகராட்சி 2024–25ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ், அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்குட்பட்ட 9,10,11,32,33,34,35,36 ஆகிய 8 கோட்டங்களில் உள்ள மொத்த மோட்டார்கள் 465 எண்ணிக்கை. இதில் 405 மின் மோட்டார்கள் மற்றும் ஏர் கம்பரசர்கள், 60 நீர் மூழ்கி மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு பொதுமக்களுக்கு தடையின்றி தண்ணீரை வழங்க வேண்டியுள்ளது.

எனவே, மேற்கண்ட 8 கோட்டங்களில் உள்ள மொத்த மின் மோட்டார்கள், ஏர்கம்பரசர்கள் மற்றும் நீர் மூழ்கி மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஆறுமாதங்கள் ரூ.33.00/– இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களின் அத்தியாவசிய தண்ணீர் பிரச்னைகளை கருதி, ஆறு மாதங்கள் வரை நீர் மூழ்கி மின் மோட்டார்கள் மற்றும் ஏர் கம்பரசர் மோட்டார்களை பழுதுபார்த்து பராமரிப்பு பணிகளை ரூ.33.00/– இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை 2024–25ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2/ம.எண். 469/கு. நீ/2024–25)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

**30)** சேலம் மாநகராட்சி **2024–25**ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ், அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்குட்பட்ட **37,38,39,40,41,42,43,44** ஆகிய **8** கோட்டங்களில் உள்ள மொத்த மோட்டார்கள் **429** எண்ணிக்கை. இதில் **393** மின் மோட்டார்கள் மற்றும் ஏர் கம்பரசர்கள், **36** நீர் மூழ்கி மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு பொதுமக்களுக்கு தடையின்றி தண்ணீரை வழங்க வேண்டியுள்ளது.

எனவே, மேற்கண்ட 8 கோட்டங்களில் உள்ள மொத்த மின் மோட்டார்கள், ஏர்கம்பரசர்கள் மற்றும் நீர் மூழ்கி மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஆறுமாதங்கள் ரூ.**30.00/–** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களின் அத்தியாவசிய தண்ணீர் பிரச்னைகளை கருதி, ஆறு மாதங்கள் வரை நீர் மூழ்கி மின் மோட்டார்கள் மற்றும் ஏர் கம்பரசர் மோட்டார்களை பழுதுபார்த்து பராமரிப்பு பணிகளை ரூ.**30.00/–** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை **2024–25**ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2/ம.எண். 470/கு. நீ/2024–25)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

**31)** சேலம் மாநகராட்சியில் திட்டப்பணிகள் மற்றும் பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் சாலைப்பணிகள், வடிகால்பணிகள், குடிநீர் பணிகள், தெருவிளக்கு பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்ற மதிப்பீடு தொகை ரூ.**50.00** இலட்சத்திற்கு மேல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்புகள் செய்தித்தாள்களில் விளம்பரமாக வெளியிடப்படுகிறது. இதற்கான செலவினங்கள் அரசு நிர்ணயம் செய்துள்ள கட்டணத்தில் பில் பட்டியல் அடிப்படையில் செய்திதாள் நிறுவனங்களுக்கு மாநகராட்சியின் பொதுநிதியில் இருந்து வழங்கப்படுகிறது.

எனவே மாநகராட்சியின் பொதுநிதியில் இருந்து செய்திதாள் நிறுவனங்களுக்கு விளம்பர கட்டணமாக வழங்க ரூ.**25.00** இலட்சங்கள் முன்பணமாக ஒதுக்கீடு செய்யலாம். இனி வரும் காலங்களில் செய்திதாள் நிறுவனங்களுக்கு வழங்க வேண்டிய விளம்பர கட்டணத்தை இத்தொகையில் இருந்து வழங்கி வரவு – செலவு பராமரிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை **2024–25**ஆம் ஆண்டு பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ1 / 5073 /2025)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

32) சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தின் மூலம் மேட்டூர் காவிரி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தனிக்குடிநீர் திட்டத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் ஒப்பந்த முறையில் மேற்கொள்வது சம்மந்தமாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசு ஆணை எண்.112, நாள்.17.06.2022-ல் வெளியிட்டுள்ளது. அரசு ஆணைப்படி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான பணியாளர்களின் விவரம் ஒப்பந்த நிபந்தனைகள் குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டதன் அடிப்படையில், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் தொழில் நுட்ப அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உரிய தொழில் நுட்ப அனுமதி கிடைக்கும் வரை, குடிநீர் விநியோக பணிகள் தடையின்றி நடைபெற வேண்டிய பணியின் அவசியத்தை கருதி, தற்காலிகமாக மதிப்பீடுகள் தயார் செய்து மாநகராட்சி சட்டம் பிரிவு 57(7)-ன் கீழ், விலைப்புள்ளிகள் பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய விலைப்புள்ளிதாரரைக்கொண்டு தனிக்குடிநீர் திட்டம் மேட்டூர் தொட்டில்பட்டியில் ஆற்று நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கோம்புரான்காடு பகுதியில் உள்ள நீர் உந்து நிலையம் முதல் மாநகராட்சி எல்லை வரை உள்ள வழியோர குடிநீர் குழாய்கள், பம்புகள் ஆகியவற்றை இயக்கி பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

மேற்காணும் பணிக்காக M/s. B.S.N. & Co., Salem ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணி ஆணை 22.03.2025-டன் முடிவடைய உள்ளது.

எனவே, இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை (23.03.2025 முதல் 08.04.2025 வரை) 17 நாட்கள் 1 MLD நீரினை நீரேற்றம் செய்ய ரூ.913/- வீதம் ரூ.27.50/- இலட்சத்தில் மேற்கொள்ள M/s. B.S.N. & Co., Salem ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி மாநகராட்சி சட்டம் பிரிவு 57(7)-ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. இதற்கான செலவினத்தை 2024-2025ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2/ம.எண். 822 /குநீ/2024-25)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

33) சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தின் மூலம் மேட்டூர் காவிரி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தனிக்குடிநீர் திட்டத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் ஒப்பந்த முறையில் மேற்கொள்வது சம்மந்தமாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசு ஆணை எண்.112, நாள்.17.06.2022–ல் வெளியிட்டுள்ளது. அரசு ஆணைப்படி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான பணியாளர்களின் விவரம் ஒப்பந்த நிபந்தனைகள் குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டதன் அடிப்படையில், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் தொழில் நுட்ப அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உரிய தொழில் நுட்ப அனுமதி கிடைக்கும் வரை, குடிநீர் விநியோக பணிகள் தடையின்றி நடைபெற வேண்டிய பணியின் அவசியத்தை கருதி, தற்காலிகமாக மதிப்பீடுகள் தயார் செய்து மாநகராட்சி சட்டம் பிரிவு 57(7)–ன் கீழ், விலைப்புள்ளிகள் பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய விலைப்புள்ளிதாரரைக்கொண்டு தனிக்குடிநீர் திட்டம் மேட்டூர் தொட்டில்பட்டியில் ஆற்று நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கோம்புரான்காடு பகுதியில் உள்ள நீர் உந்து நிலையம் முதல் மாநகராட்சி எல்லை வரை உள்ள வழியோர குடிநீர் குழாய்கள், பம்புகள் ஆகியவற்றை இயக்கி பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

மேற்காணும் பணிக்காக M/s. B.S.N. & Co., Salem ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணி ஆணை 20.02.2025–டன் முடிவடைய உள்ளது.

எனவே, இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை (21.02.2025 முதல் 22.03.2025 வரை) 30 நாட்கள் ரூ.49.00/– இலட்சத்தில் மேற்கொள்ள M/s. B.S.N. & Co., Salem ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி மாநகராட்சி சட்டம் பிரிவு 57(7)–ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. இதற்கான செலவினத்தை 2024–2025ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2/ம.எண். 821 /குநீ/2024–25)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

**34)** சேலம் மாநகராட்சி மேட்டூர் தொட்டில்பட்டி தனிக்குடிநீர் திட்டத்தில் கோம்புரான்காடு நீர் உந்து நிலையம் (Booster Station) வளாகத்தில் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ள 1495 எச்.பி. மின் மோட்டாரில் குழாய்கள் மற்றும் தளவாட பொருட்கள் கொண்டு ஏற்கனவே அமைந்துள்ள 1200மிமி பிரதான குழாயுடன் இணைப்பு பணிகள் செய்து கோடை காலத்தில் பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்திட வேண்டியுள்ளது.

இப்பணிகளுக்கு 600மிமி எம்.எஸ். பிளேட் (10mm thick MS Plate Marked Pipe) கொண்டு தயார் செய்யப்பட்ட இணைப்பு குழாய் பொருத்தி, அதனுடன் இருப்பில் உள்ள 600mm Non Return Valve, 600mm Slucie Valve, 400Sqmm Cable மற்றும் தேவையான தளவாட பொருட்களுடன் பணியாளர்கள் மற்றும் கிரேன் இயந்திரம் கொண்டு ஏற்கனவே அமைந்துள்ள 1200மிமி பிரதான குழாயுடன் இணைப்பு பணிகள் மேற்கொள்ளவும், இணைப்புகளில் உடைப்பு ஏற்படாதவாறு கான்கிரீட் பெட் அமைக்கும் பணி, நங்கவள்ளி சுத்திகரிப்பு நிலையம், கருமலைக்கூடல் நீர் உந்து நிலையம் மற்றும் ராமன் டவர் நீரேற்று நிலையம் ஆகிய இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்திடும் பணிகளுக்காக தொகை ரூ.6.40/– இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

கோடைகாலம் என்பதாலும், குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும் மேற்காணும் பணியை ரூ.6.40/– இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2024–2025ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2 / 297 /2024–25)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

**35)** சேலம் மாநகராட்சி மேட்டூர் தொட்டில்பட்டி தனிக்குடிநீர் திட்டத்தில் சுமார் 155MLD குடிநீரானது தொட்டில்பட்டி சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து கோம்புரான்காடு நீர் உந்து நிலையம் வழியாக சேலம் மாநகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இவற்றில் தொட்டில்பட்டி நீரேற்று நிலையத்தில் செயல்பாட்டில் இருக்கும் 2 எண்ணிக்கையில் 600mm dia NRV பழுதடைந்த நிலையில் உள்ளதால் இவ்விரண்டையும் சரி செய்ய வேண்டியும், கோம்புரான்காடு பூஸ்டர் நிலையத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள புதிய பம்பில் பொருத்த ஒரு 600mm dia NRV பொருத்தவும், அவசர பயன்பாட்டிற்கு (Spare Purpose) வைத்துக்கொள்ள 1 எண்ணிக்கையும் வேண்டி உத்தேச மதிப்பீடு ரூ.3.25/– இலட்சங்களுக்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, மேற்காணும் பணியை ரூ.3.25/– இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2024–2025ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2 / 298 /2024–25)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

**36)** சேலம் மாநகராட்சி மேட்டூர் தொட்டில்பட்டி தனிக்குடிநீர் திட்டம் கோம்புரான் காட்டில் அமைந்துள்ள நீர் உந்து நிலையத்தில் தற்சமயம் சேலம் மாநகர மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய 5 எண்ணிக்கையிலான மோட்டார்கள் 5 எண்ணிக்கை தயார் நிலையில் உள்ளது. இதில் 3 மோட்டார்கள் தொடர்ந்து இயக்க வேண்டியது அவசியமாகும். இதற்கென VFD (Variable Frequency Device) 4 எண்ணிக்கையில் பயன்பாட்டில் உள்ள நிலையில் ஒரே நேரத்தில் 2 எண்ணிக்கையிலான VFD–க்களில் பழுது ஏற்படும் சூழலில் கூடுதல் பாதுகாப்பிற்காகவும், எதிர்வரும் கோடைகாலத்தினை கருத்தில் கொண்டும் புதியதாக மின்பொறி (Soft Starter) பொருத்தப்பட்ட நிலையில் மோட்டாரையும், மின் பொறியினையும் இணைக்க 33.3 KV H.T மின் வடக்கம்பிகள் 85 மீட்டர் அமைக்க வேண்டி உத்தேச மதிப்பீடு ரூ.6.66/– இலட்சங்களுக்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, மேற்காணும் பணியை ரூ.6.66/– இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2024–2025ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**(இ2 / 299 /2024–25)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

37) தமிழ்நாடு காலநிலை மீள்திறன்மிக்க நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ளும் உள்ளாட்சி அமைப்புகள் தமது உள்ளாட்சிகளில் கடைபிடிக்கத் தக்க "குடிநீர் விநோகத்திற்க்கான செயல்பாடுகள்" தொடர்பான துணை விதிகளை உரிய அலுவலரின் அனுமதி பெற்று அரசிதழில் வெளியிட அரசு கூடுதல் தலைமைச் செயலர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியம் அவர்களின் கடிதம் எண்.TNUIFSL/Projects SMIF–TN III & TNCRUDP நாள் 6.11.2024–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மாநிலம் முழுவதும் உள்ள உள்ளாட்சி அமைப்புகள் கடைப்பிடிக்கத் தக்க மாதிரி உப விதிகளை வகுத்து நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் ROC.NO.33702/2024/EAI நாள் 17.03.2025 ன் படி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சேலம் மாநகராட்சி குடிநீர் விநியோகம் செயல்பாட்டிற்கான நெறிமுறைகள் மற்றும் கட்டண விபரங்கள் அடங்கிய உப விதிகள் தயார் செய்யப்பட்டு ஒப்புதலுக்காக நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளது. அவ்விதம் தயாரிக்கப்பட்ட சேலம் மாநகராட்சி குடிநீர் விநியோக செயல்பாட்டுக்கான உப விதிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

## Salem City Municipal Corporation Drinking Water Supply By-law - 2025

In exercise of the powers conferred under sub-section (1) of section 199 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act of 1999) the council of Salem City Municipal. Municipal Corporation, hereby makes the following By-Laws with the approval of the Director for regulation of Drinking water supply.

1. Drinking water supply connection shall be provided only to the houses / buildings assessed by the Municipal Corporation / for payment of property tax.
2. For getting drinking water supply connections, the owner of the building or the tenant of the building with the approval of the owner shall apply to the Commissioner in “Form 1” in the Annexure along with the fees of Rs.100/-, details indicated in the Form 1 and details of property such as copy of sale deed, property tax remittance etc.,
3. The City Engineer or his/her authorized officer shall scrutinize the application and advise the owner/tenant to remit the deposit depending upon the plinth area as specified in Table-1 either in one or more installments as ordered by the Commissioner based on the Council resolution along with charges towards inspection, road restoration and centage.

தொடர்ச்சி..

4. The commissioner shall thereafter issue order in Form 2 to provide Drinking water service connection. The connection shall be given through the Municipal Corporation under supervision by Municipal Corporation authorities in the order of seniority prepared based on the date of registration of application.

2 i. For getting drinking water supply connections in the new water supply system provided or being provided as part of any comprehensive water supply improvement scheme, the owner of the building or the tenant of the building with the approval of the owner shall apply to the Commissioner in "Form 1" in the Annexure along with the application fees of Rs.100/-, details indicated in the Form 1 and details of property such as copy of sale deed, property tax remittance etc,. The commissioner shall thereafter issue order in Form 2 to provide drinking water service connection.

ii. The drinking water service connection shall be given through the civil works Contractor engaged by the Municipal Corporation Parastatal Agency namely Tamil Nadu Water supply and Drainage Board under any water supply improvement scheme. The Contractor, upon recommendation / approval by the City Engineer/Municipal Engineer, shall provide drinking water service connection under any water supply improvement project.

iii The owner / tenant of the building has to bear the cost expenditure towards cutting of road surface and restoring the same to the original condition. The charges to be paid towards the road cutting and restoration charges is workedout and tabulated in following table .

**Table : A – Cost of road cutting & restoration Charges**

| Sl. No. | Road Type | Road Length | 2024-2025 | | 2025-2026 | |
|---|---|---|---|---|---|---|
| | | | Digging Charges | Supervising Charges | Digging Charges | Supervising Charges |
| 1 | Earthen Road | 1 Mts - 30 Mts | **2183** | **1742** | **2292** | **1829** |
| 2 | Earthen Road | 31 Mts - 90 Mts | **4824** | **4130** | **5065** | **4337** |
| 3 | Bitment Tar Road | 1 Mts - 30 Mts | **4680** | **2883** | **4914** | **3027** |
| 4 | Bitment Tar Road | 31 Mts - 90 Mts | **9109** | **6681** | **9564** | **7015** |
| 5 | Cement Concrete Road | 1 Mts - 30 Mts | **5406** | **3393** | **5676** | **3563** |
| 6 | Cement Concrete Road | 31 Mts - 90 Mts | **10356** | **7846** | **10874** | **8238** |
| 7 | WBM Road | 1 Mts - 30 Mts | **0** | **0** | **0** | **0** |
| 8 | WBM Road | 31 Mts - 90 Mts | **0** | **0** | **0** | **0** |

These charges will be increased at the rate of 5% per annum for all Categories. The charges for every consequtive financial year can be worked out by increasing at the rate of 5% from the previous year value in each category.

தொடர்ச்சி..

iv. The City Engineer shall advise the applicants to remit the deposit amount and road restoration charges depending upon the plinth area as specified in Table-1 and Table –A either in one or more installments (not more than 10 installments) along with Property tax as ordered by the Commissioner. The Parastatal Agency / City Engineer shall ensure that all the assessed properties (both domestic and non-domestic) are provided with drinking water supply service connections without any omissions.

3. The application under bylaw 1 and 2 received along with the requisite documents will only be considered for providing drinking water supply connection.

4. The Municipal Corporation shall levy the water charges based on the plinth area of the building as per the rates provided in Table-2 for both domestic and non-domestic connections. The water charges shall be levied either on a fixed flat rate basis or based on the volume of water consumed and billed subject to a minimum monthly charge irrespective of the volume of water consumed.

5. i. The Municipal Corporation shall determine whether a drinking water supply connection is domestic or non-domestic depending upon the type of assessment and the charges shall be levied accordingly.

ii. The Municipal Corporation shall levy the charges based on non-domestic category even though the applicant uses it for domestic purposes in case of the following fully/partially constructed buildings.

a. The drinking water supply connections to manufacturing units, business concerns, garden, buildings structures, fountain, swimming pools, luxury resorts and mechanical consumptions, sale place of cattle, firms, private organizations private hospitals, private veterinary hospitals, lodges, recreational places, hotels, theatres and any other business places.

b. The drinking water supply connections to buildings owned/leased/rented by business organizations such as railways, security organizations etc, will be considered as non-domestic connections.

c. The commercial water connection shall include connections to commercial buildings related to business and work-related buildings which include canteens, restaurants, tea/coffee shops, Marriage halls, theatres and other business places

iii. Industrial water connections shall include connection to industrial buildings and all other organizations certified under the Factories Act, 1948 such as soda making companies, ice manufacturing companies, rice mills and all Small-Scale Industries.

a. The water connections to buildings owned by the Municipal Corporation and maintained by tenants or lessees shall be classified as domestic or non-domestic connection depending on the end use of the building.

தொடர்ச்சி..

b. All commercial and industrial connections other than domestic shall be classified as non-domestic.

6.

i. For a domestic water connection, the charges will be levied as per non-domestic rates if the consumption is found to be more than twice the base level of supply as specified in Table-2 consecutively for two billing periods.

ii. If any building with a water connection is demolished, then the water connection shall be disconnected.

iii. In case of construction of additional floors/area or major renewal works are carried out in the existing domestic building using the Municipal Corporation water, then the water consumption will be considered as non-domestic, and charges shall be levied accordingly.

iv. On completion of such additional construction/renewal works, the consumer shall apply for revised tax assessment to the Municipal Corporation and shall pay the additional charges, including penal charges as applicable and to get an order for conversion to a domestic connection after due verification/inspection by the Municipal Corporation authorities.

7. (1). For every household assessed under property tax, one water supply connection shall be given. For those connections, flow control valve and gate valve shall be fixed to control the flow of water. Households having water supply connections shall use water only for their exclusive uses and shall not supply water to other households having no water supply connection.

(2) For the purpose of providing Water supply connection for Apartments.

a) While giving water supply connections to apartments having two or more households, every household **(No. of Property tax assessment)** shall be separately assessed, and deposit shall be collected separately from each of the flats or apartments.

b) Irrespective of multiple property tax assessments in an apartment, the water supply connection shall be provided as total distribution system, considering the total demand and upon approval by the City Engineer. Individual connections will not be provided for each flat. The number of physical connections, size of service connection pipe, size of ferrule and rating of flow control valve shall be designed and decided by the City Engineer taking into account the total number of dwellings, total water supply demand etc. and the water service connection shall be provided after getting approval of the Commissioner.

c) Every Property tax assessment should be treated as single unit for assessment of water supply connection and user charges and its details are specified in the Table below:-

| Sl.No | Apartments | No. of Connection | Deposit | Size of Pipe (in. dia) |
|---|---|---|---|---|
| 1 | Up to 4 Flats | I connection | Rs. 20,000 | Decided by City Engineer/Municipal Engineer |
| 2 | From 5 to 8 Flats | 2 connection | Rs. 20,000 for Each Connection | |
| 3 | From 9 to 12 Flats | 3 connection | Rs. 20,000 for Each Connection | |
| 4 | **Above 12 Flats** | **1 connection for each 4 Flats** | Rs. 20,000 for Each Connection | |

8. (1) Water supply connections in places of worship, used for public consumption purposes only, will be provided as follows:

a. The by-law applicable for providing domestic connections shall be applicable for providing water supply connections to places of worship.
b. The administrators of the places of worship are responsible for laying pipelines, maintaining and removal of the same. The costs of maintenance shall be borne by them. The pipe lines shall have 15 mm diameter and shall be fixed with automatically closing water taps to prevent water losses.
c. The water supply shall be used only for consumption and the charges shall be levied as per domestic rates.
d. Non-domestic water supply connections shall be provided to the shops and other commercial complexes located near by the worship places which are maintained by the same administrators after payment of deposit and all other charges as applicable.

9. Water Supply.

(1) The Buildings used for Government educational Institutions and Government Hospitals are exempted from payment of property tax and the water supply charges will be collected as per domestic charges.

(2) Government office buildings and Public sector units:

a. While giving water supply connections, the assessment shall be ensured and the by-laws applicable for providing non-domestic water supply connections shall be followed.

தொடர்ச்சி..

b. Irrespective of property tax assessments, the water supply connection shall be provided as total distribution system, considering the total demand and upon approval by the City Engineer. Individual connections will not be provided for each building within the premises. The number of physical connections, size of service connection pipe, size of ferrule and rating of flow control valve shall be designed and decided by the City Engineer taking into account the total number of students and officials, total water demand etc. and the water service connection(s) shall be provided after getting approval of the Commissioner.

c. For providing Water supply connections to the Anganwadis and Municipal School buildings; such buildings are exempted to pay water supply charges.

d. Irrespective of property tax assessments, the water supply connection shall be provided as total distribution system, considering the total demand and upon approval by the City Engineer. Individual connections will not be provided for each building within the premises. The number of physical connections, size of service connection pipe, size of ferrule and rating of flow control valve shall be designed and decided by the City Engineer taking into account the total number of students and officials, total water demand etc. and the water service connection(s) shall be provided after getting approval of the Commissioner.

10. a. While providing water supply connections, ferrules or flow control valves shall be fixed to ensure water supply at the rate of 5 litres per minute (lpm) per connection for domestic connections. All accessories for providing water supply connections such as stoppers, valves, meters etc., including the length of the pipe will be determined by the City Engineer or by his/her authorized representative in accordance with the following pipe sizes.

i. Connection with 15mmdiameter pipe –10mmferrule.

ii. Connection with 20mmdiameter pipe – 15mmferrule.

If any other measure is required, the same shall be decided by the City Engineer. All the fittings, ferrules, meters etc. shall comply with relevant IS Codes and Standards.

b. If the water service pipeline happens to be taken across ditches, underground drainage or small bridges, which the City Engineer considers the same may cause damage to the pipes or may contaminate the water, then iron casing pipes shall be used for protecting the service connection pipes.

11. When the water connection has to be provided for a domestic which is more than 90 meters distance from the water distribution network, the City Engineer not below the rank of Executive engineer or the Regional Executive Engineer shall inspect the building premises and assess the technical feasibility of providing a water supply service connection duly following the above by-laws and provide the connection. If it is found to be technically not feasible, then shall examine whether the existing distribution system could be extended provided the extension shall be carried out in a public road and the design shall comply with the requirements as per CPHEEO Manual so as to provide the water service connection.

12.

a. The fittings, joints, meters, taps, valves etc. used for providing the water supply service connections shall generally be visible for carrying out inspection by the City Engineer or by his/her authorized persons by the Municipal Corporation. The building owner or the tenant shall facilitate the authorities to monitor/inspect the provision of water service connections. Any objection by the owners/tenants will result in disconnection.
b. While providing water service connections, all appurtenances shall be mounted within the building premises in a conspicuous area preferably near the entrance, from where the owners/tenants shall tap the water into their underground/ground level/elevated storage facilities.
c. No electrical motors or pumps of any kind shall be used for sucking water directly from the water distribution pipeline. If the same is detected, the water supply connections will immediately be disconnected, and all such appliances will be seized. If the same detected for the second time, the Municipal Municipal Corporation shall initiate legal proceedings against the owner/tenant.
d. If the owner/tenant whose water connection is disconnected due to usage of mechanical devices for sucking water directly from the distribution system, applies for water supply connection again, shall pay a penalty of Rs.10,000/-and disconnection/reconnection charges as applicable along with additional deposit as determined by the City Engineer and the Municipal Corporation shall provide reconnection upon receipt of the above amount.

13.

a. While taking water supply service connection, the owner/tenant of the building shall provide the water meters approved by the City Engineer/Municipal Engineer. The meter shall be housed in a box which shall either be installed on the compound wall or on the ground within the building premises and shall be kept in a locked or sealed condition. The water consumed shall be calculated based on the meter readings to be taken periodically and the consumer shall be billed accordingly as per the applicable rates.

தொடர்ச்சி..

b. The water meter shall be purchased, installed and maintained by the owner/tenant properly.
c. If the meter gets damaged, it shall immediately be repaired/replaced by the owner/tenant at their own cost under the supervision of the City Engineer or his/her authorized persons. Failure to replace the defective meters will result in disconnection of water supply.

14(1) The deposit and water consumption charges shall be payable by the owner/tenant as specified in the Table below:

Table-1: Water Supply Service Connection Deposit

| **Plinth Area of Assessment in Sq.ft** | **Water Supply Service Connection Deposit (in Rs./connection)** | | | |
|---|---|---|---|---|
| | **Domestic** | **Non-Domestic** | **Industrial** | **Educational /Institution/ Government Offices/Others** |
| **Municipal Corporation** | | | | |
| <=600 | 7500 | 15000 | 15000 | 15000 |
| 601-1200 | 10000 | 20000 | 20000 | 20000 |
| 1201-1800 | 12500 | 25000 | 25000 | 25000 |
| 1801-3500 | 15000 | 30000 | 30000 | 30000 |
| 3501-5000 | 20000 | 40000 | 40000 | 40000 |
| 5001-10000 | 25000 | 50000 | 50000 | 50000 |
| Above 10001 | 40000 | 80000 | 80000 | 80000 |
| * This is the base rate for the plinth area of 10001 sq.ft. The deposit for the plinth area above 10001 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area. | | | | |

தொடர்ச்சி..

Table-2: Water Consumption Charges

| Plinth Area of Assessment in Sq.ft | Water Consumption Charges (Rs./month/connection) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Upto 16KL in all Corporations and UGSS Ulbs<br>Upto 11 KL for Municipalities | | | | for every additional KL | | | |
| | Domestic | Non-Domestic | Industrial | Educational / Institution / Government Offices/Others | Domestic | Non-Domestic | Industrial | Educational / Institution / Government Offices/Others |
| **Municipal Corporation** | | | | | | | | |
| <=600 | 120 | 360 | 360 | 360 | 18 | 54 | 54 | 54 |
| 601-1200 | 150 | 450 | 450 | 450 | 22 | 66 | 66 | 66 |
| 1201-1800 | 180 | 540 | 540 | 540 | 27 | 81 | 81 | 81 |
| 1801-3500 | 210 | 630 | 630 | 630 | 32 | 96 | 96 | 96 |
| 3501-5000 | 250 | 750 | 750 | 750 | 44 | 132 | 132 | 132 |
| 5001-10000 | 280 | 840 | 840 | 840 | 50 | 150 | 150 | 150 |
| Above 10001 | 300 | 900 | 900 | 900 | 55 | 165 | 165 | 165 |
| * This is the base rate for the plinth area of 10001 sq.ft. The water consumption charge for the plinth area above 10001 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area. | | | | | | | | |

(2). The water supply service connection deposit and water consumption charges shall be increased at the rate of **3% on every year**, so as cover the cost of operation and maintenance of the entire water supply system.

(3). The owner/occupant, who have already availed the House service connection, shall also liable to pay the remaining amount of deposit for water supply service connection to the extent of the present rate of such Deposit.

15 (1)

For the water distribution through private Lorries, through public association, the water charges shall be decided by **the Municipal Corporation** based on the Quantum of Water required and distance of Supply.

The **Municipal Corporation** has the right to revise the charges depending on the circumstances.

During emergency conditions, the distribution of water through Lorry shall be determined by the Commissioner.

(2).Temporary water supply Connections:

The Commissioner is authorized to give temporary water supply service connections to places like exhibition, circus, or religion-oriented functions, temporary public gathering etc. considering the estimation given by the Municipal Corporation subject to the following conditions namely:

தொடர்ச்சி..

(a) Minimum charges per month per connection shall be Rs. 1500/- up to 10 KL and Rs. 50/- for consumption of every additional KL beyond the 10 KL.

(b) All temporary water service connections shall be treated as non-domestic.

(c) Temporary water connections shall be given for a period of 90days only.

**16.**

(1)The consumers shall remit the water consumption charges as per the demand raised either based on water meter readings or based on flat charges within 15 days of receipt of demand notice. Failure to remit the charges within the specified time will result in fine for the charges paid after the date fixed for such payment at one rupee for every hundred rupee up to charges to be paid for every month or less than a month.

(2). Any losses arising out of non-payment of charges and subsequent disconnection of water supply services shall be borne by the owner/tenant of the buildings.

(3). Upon disconnection of water supply, the charges shall be collected by following the same procedure for collection of property tax.

(4). If the owner/tenant requests for reconnection, the Municipal Corporation / Municipal Council shall levy the charges of Rs. 500/- for disconnection and Rs. 500/- for reconnection along with road repair/restoration charges as required and provide the service connection subject to the following conditions namely:

(a) Any additional deposit rose by the Council for carrying out disconnection and reconnection should have been paid by the owner/tenant.

(b). The entire arrears of water charges and property tax should have been paid by the owner/tenant.

17.

(1). If case of no consumption of water, minimum charges shall be levied with no discount. The owner/tenant may temporarily get the connection disconnected by getting written permission from the Commissioner. For this period, no charges shall be levied. However, for disconnection and reconnection, charges of Rs. 500 each along with road repair charges as required, shall be levied.

(2). If the owner/tenant wants to disconnect the water connection temporarily or permanently he/she can do so by remitting the disconnection charge of Rs.500/-with an advance period of 30 days.

18. (1) The owner/tenant shall pay Rs. 250/- as meter checking charges, in case of repair in meter or issues in the meter reading within 30days of the meter reading taken by the Municipal Corporation authorities.

(2) If such a complaint is not made within this period and without payment of the charges shall not be considered.

தொடர்ச்சி..

(3).After inspection, if the meter/meter reading is found to be defective, the meter checking charges will be refunded and if the meter is found to be in a good working condition, the meter checking charges will be forfeited.

**19.**(1) If the meter is defective for more than one month or if the meter is found to be not showing the proper reading, the consumption charges shall be calculated based on the consumption during the same month in the previous year. The consumption charges thus calculated by the City Engineer or his / her representatives shall be final.

(2) Minimum charges shall be levied if the house is locked, and the meter reading is not taken. If the meter reading is taken later and if the water charge is worked out to be more than the minimum charges already remitted, the difference in amount shall be levied along with the subsequent bill amount.

(3) The Municipal Corporation / Municipal Council shall levy the minimum charges even if the house is found to be locked for more than two readings. If the owner/tenant fails to remit the minimum water charges thus levied by the Municipal Corporation, then the connection will be disconnected by the Municipal Corporation authority, subsequently the tenant/ owner shall avail water connection by remitting the reconnection charges, disconnection charges along the pending water charges without any due.

20. On inspection by the authorities , if the joints and taps are found to be in a damaged condition, the owner/tenant shall be given notice for repairing the damages. If the damage is not repaired immediately responding the notice then, the Municipal Corporation shall cause action to repair the damage and all costs so incurred for the repair shall be collected from the owner/tenant along with the water charges of the subsequent month.

21. If the owner/tenant is found to use the water obtained from domestic connection for non-domestic purposes without the concern of the concerned authorities, then the owner / tenant shall be required to remit the charges as per the non-domestic rates from that month onwards. If the tenants/ owner want to change the non domestic connection by giving application to Municipal Corporation, then connection will be changed as domestic connection by levying fine amount of Rs. 2000/- . This fine amount will be raised as demand along with the subsequent monthly bill.

22.If any water supply service connection is found to be provided by the owner/tenant on their own without obtaining permission from the Municipal Corporation, then the connection will be treated as un-authorized connection and shall be regularized as regular water supply connection by following the procedure along with a fine amount as below.

a. For domestic connection Rs. 10,000/-
b. For non-domestic connection Rs. 20,000/-

23. Where water supply connections required to be provided for common toilets, urinary places and latrines, a tank shall be constructed with the necessary equipment for storage and supply of water in the location as decided by the City Engineer and connection can be provided.

தொடர்ச்சி..

24. If a water supply connection required to be provided for boiler plants, water shall be stored in a separate tank and utilized only from that tank. It shall be ensured that the tank shall be provided with ball valves and other appurtenances including alarms in a visible location for easy inspection.

25. Temporary connections for occasions like marriages or any other occasions may be provided with the approval of the Commissioner on receipt of application in Form 3 along with charges of Rs. 2000/- per day per connection for supply of water up to 20 KL. Necessary pipelines, fittings and other accessories required for providing temporary connection shall be arranged by the applicants at their own cost including restoration of road surface to its original condition. No temporary connection will be provided for a period of more than 5 days.

26. The Municipal Corporation shall maintain a register for the purpose of water supply connection including the house service register meter, meter reading ledger and card therefore in Form 4

27. The Municipal Corporation AE/JE shall check not less than five percent of the meter readings recorded by the meter reader in a year and the Municipal Corporation Engineer shall check not less than twenty four meter readings in a year recorded by the meter recorder. The Accountant shall check not less than twenty five percent of the bills section, check and initial the bills so checked.

28. All house connections whether within or outside the premises attached with the Municipal Corporation water supply mains shall be under the control of the Municipal Corporation but shall be altered, repaired and kept in proper order at the expense of the owner of the premises to whom they belong or for the use of which they were constructed.

29. (1)The owner/tenant shall not attempt to break the seal or lock or the glass part of the water meter or try to open the meter or alter its contents or try to obstruct the measurement path of the water meter.
(2)The owner/tenant shall not tap water before it is passing through the water meter.

**30. (1).**The procedure for providing water connections followed earlier until the above rules are notified shall be null and void.

(2)The owner/tenant while submitting application for taking new water supply connection shall pay all the taxes to the Municipal Corporation and enclose the copies of receipts.

31. If the Municipal Corporation notices that water taps are damaged willfully or water connection is misused by the owner/tenant even after giving 24 hours warning notice, the connection shall immediately be disconnected. The Municipal Corporation will not be responsible for any losses to the owner/tenant on account of such disconnection.

தொடர்ச்சி..

32 .Any person causing damage to the Municipal Corporation property shall be liable for punishment in the following manner. Fine shall be levied up to Rs.500/- initially and if the offence continues despite giving warning notice, running penalty of Rs.100/- per day shall be levied. If the offence continues, water service connection will be disconnected, and legal proceedings will be initiated through the Court of Law.

33(1) Municipal Corporation shall provide individual water service connections to all the people living below poverty line and shall avoid supply of drinking water through Lorries/HDPE tanks/Public Fountains for day-to-day consumption by the people. However, if it is not technically feasible to provide individual house service connections to households in any particular area, then water can be supplied either through Lorries or HDPE tanks or through Public Fountains after the Resolution by the Council and upon approval by the Chief Engineer, Directorate of Municipal Administration, Chennai.

**33 (2)**

(2)No person shall take water in containers of capacity more than 30liters from the taps

(a) Water shall be used only for domestic purposes except for emergencies due to fire accidents.

(b)No person shall be allowed to take baths or wash clothes or clean cattle or clean vehicles from the public water taps.

(c)When other people are waiting, no person shall take water more than once from the public taps.

(3) In addition to the installation of public fountains fixed at the time of formulation of the water supply scheme, no new public fountains except in areas where people belonging to economically weaker sections reside shall be installed. The number of public fountains in such area shall be provided at the ratio of 50 percentage residential buildings which have no house connection of water supply.

(4) Wherever economically weaker sections reside, the commissioner may decide whether the existing public fountain may be maintained or the same may be converted into bulk water supply with charges collected from the beneficiaries of such area, but assessing a "NIL" property tax in the name of Community Based organization (CBO).

(5)No person shall cause wastage of water provided by the Municipal Corporation by the misuse of public stand-posts or pipes, drinking fountains of hydrants.

******

**சேலம் மாநகராட்சியில் குடிநீர் விநியோகத்தினை செயல்படுத்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான மாதாத்திர ஊதியம், தனிக்குடிநீர் திட்டம் மற்றும் சேலம்–மேட்டூர் (நங்கவள்ளி) குடிநீர் திட்டம் ஆகியவற்றின் தலைமை நீரேற்று நிலைய பராமரிப்புப் பணிகளுக்கான செலவினம்,**

தொடர்ச்சி..

இவற்றின் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான மின் கட்டணச் செலவினம் மற்றும் மாநகருக்குள் குடிநீர் விநியோகம் செய்ய பயன்பாட்டில் உள்ள நீர் உந்து நிலையங்களின் மின்சாரக் கட்டண செலவினம், தலைமை நீரேற்று நிலையங்கள் மற்றும் மாநகருக்குள் இயங்கும் குளோரினேற்ற ஆலைகளில் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் ஆகியவற்றிற்கான செலவினம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆண்டுச் செலவினம் ரூ. 64.12 கோடி ஆகும். மேற்காணும் செலவுகளை ஈடுகட்ட தற்போதுள்ள கட்டண அமைப்பை மாற்ற வேண்டிய அவசியம் உள்ளதாலும் நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ள இக்கட்டண அமைப்பு அதனை ஈடு செய்வதாக உள்ளதாலும் மன்றத்தில் பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள துணை விதிகளையும் அதன் வழி மாற்றியமைக்கப்பட்டுள்ள குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை ஆகியவற்றையும் மன்றம் அனுமதிக்கலாம்.

மேலும் இவ்வலுவலக கோப்பு எண்.Roc.No.W1/11511/98 இன்படி, இம்மாமன்ற தீர்மான எண்.156, நாள்.28.07.1998-ல் இம்மன்றத்தால் அனுமதிக்கப்பட்டு 09.12.1998 ஆம் நாள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட சேலம் மாநகராட்சி குடிநீர் விநியோக உப விதிகளையும் அதனை தொடர்ந்து இவ்வலுவலக கோப்பு எண்.இ6/34224/2002-ன்படி இம்மாமன்றத் தீர்மானம் எண்.212, நாள்.30.12.2002-ல் அனுமதிக்கப்பட்டு 05.02.2003 ஆம் தேதிய தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட உப விதிகள் மற்றும் கட்டண அமைப்பை மாற்றியும் அதனை தொடர்ந்து இவ்வலுவலக கோப்பு எண்.இ3/12006/2021-ல் திருத்தி அமைக்கப்பட்ட இம்மான்ற தீர்மான எண்.269, நாள்.27.08.2024-ன்படி அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்ட கட்டண அமைப்பை மாற்றியும் தற்போது இம்மன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்பட்டுள்ள மேற்காணும் உப விதிகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று தமிழ்நாடு அரசிதழில் பதிவு செய்து இம்மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(இ6/5118/2025)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**38)** சேலம் மாநகராட்சி 2024-25 ஆம் ஆண்டு SFC பள்ளி மேம்பாட்டு மானிய நிதியின் கீழ் கோட்டம் எண் 07 இல் அய்யந்திரு மாளிகை மாநகராட்சி துவக்கப்பள்ளியில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 21616 / 2024 / SS2, நாள்: 10-09-2024 ஆம் தேதி நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில், மேற்படி பணிக்கு 2024-25 ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.90 இலட்சத்திற்கு 03-10-2024 இல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டு, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் மதிப்பீடு தொகைக்கு 0.09 % குறைவு என வரப்பெற்ற M/s Swathi Construction சேலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.6,55,300/- ஐ ஏற்று சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் 432 நாள்: 28-10-2024 இல் அனுமதி வழங்கியதின் பேரில் மேற்படி பணிக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, தற்போது பணி முடிக்கப்பட்டது.

மேற்படி பணியிடங்களில் ஏற்பட்ட தளஅளவுகளின் மாற்றங்களின் காரணமாகவும், வடிவமைப்பு காரணமாகவும் சில இனங்களில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் உள்ள அளவுகளை விட கூடுதலாக பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட மாற்றங்களுடன் இப்பணியை மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் அளவு பணிகளும், அதற்கான செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

**I மதிப்பீட்டில் உள்ள இனங்கள் : (BOQ)**

| வ. எண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட வேண்டிய அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | Dismantling clearing away and carefully stacking material useful for the Weathering course with Pressed Tiles as directed by the departmental officers etc. complete | 205.00 | 9425.90 | 238.49 | 10970.54 | 1544.64 |
| 2 | Weathering course over roof slab using 20 mm size brick jelly mixed with pure slacked lime no sand to be used the proportion being 32:121/2 including cost and convenience | 16.00 | 65385.92 | 17.88 | 73057.68 | 7671.76 |

தொடர்ச்சி..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | Finishing the top of roof with one course of machine pressed tiles of size 200 mm x 200 mm x 20 mm of approved quality in Cement Mortar 1:3 (One Cement add three sand) 12 mm thick | 220.00 | 283382.00 | 252.16 | 324782.08 | 41400.08 |
| | Painting two coats with ready mixed plastic emulsion paint of 1st class quality and of approved colour over a priming coat | 785.00 | 203001.00 | 942.98 | 243288.84 | 40287.84 |
| | Painting two coats with best synthetic enamel paint of approved Colour for old iron works | 62.00 | 8422.70 | 64.76 | 8807.36 | 384.66 |
| | Total | | 569617.52 | | 660906.50 | 91288.98 |

மேற்படி பணியில் மதிப்பீட்டில் உள்ள இனங்களில் கூடுதல் அளவுகள் **2024–2025** ஆம் ஆண்டு அதே ஒப்பந்த விலை விகிதத்தில் செய்து முடிக்கப்பட்டதிற்கு மன்ற அனுமதியும், இப்பணியினை செய்து முடித்தால்தான் பணி முழுமையடையும் என்பதால் அசல் ஒப்பந்ததாரர் M/s Swathi Construction சேலம். என்பவர் மூலம் அசல் மதிப்பீடு தொகை ரூ.**7.90** இலட்சத்திற்குள், மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இதற்கான செலவுத் தொகை ரூ.**91,288.98**/–தினை, M/s Swathi Construction சேலம் அவர்களுக்கு வழங்கவும், மன்றத்தின் பின்னேற்ப்பு அனுமதி வேண்டடப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

மன்றம் பின்னேற்ப்பு வழங்கி அனுமதிக்கலாம்.

**(E3 / Est. No.202/B/ 2024 –2025)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**39)** சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலம் செட்டிசாவடி திடக்கழிவு மேலாண்மை வளாகத்தில் மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையாளர் அவர்கள், மாநகர சுகாதார நல அலுவலர் அவர்கள் மேற்கண்ட வளாகத்தில் தல ஆய்வு செய்யும் போது அங்கு அமைக்கப்பட்டுள்ள MCC & MRF மையத்திற்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்குமாறும் செட்டி சாவடி திடக்கழிவு வளாகத்தில் தேங்கியுள்ள குப்பை கிடங்கில் அடிக்கடி ஏற்படும் தீ மற்றும் புகையை கட்டுப்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டது.

மேற்கண்ட பணிகளில் புதியதாக அமைக்கப்பட்ட கீழ்நிலை தொட்டியில் இருந்து குழாய்கள் அமைக்கவும், சின்டெக்ஸ் டேங்க் தொட்டி அமைக்கவும், நீர் ஏற்றம் செய்ய மின் மோட்டார் மற்றும் பேனல் போர்டு அமைக்கவும் மேற்கண்ட பணிகளுக்கு **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**40.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

(அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ) மேற்படி பணிக்குண்டான மதிப்பீடு தொகை ரூ.**40.00** இலட்சத்தினை பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம்.

**(E3 / EST. No. 296 /Ws / 2024-25)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

**40)** சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண் 07 இல் ராமநாதபுரம் பகுதியில் புதியதாக கழிப்பிடம் கட்டும் பணிக்கு **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**27.50** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

(அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ) மேற்படி பணிக்குண்டான மதிப்பீடு தொகை ரூ.**27.50** இலட்சத்தினை அரசு மான்யம் பெற்று செலவினம் மேற்கொள்ளலாம்.

**(E6 / EST. No.294 / B / 2024-25**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

**41)** சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண் **07** இல் புதியதாக சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டும் பணிக்கு **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**43.40** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

(அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ) மேற்படி பணிக்குண்டான மதிப்பீடு தொகை ரூ.**43.40** இலட்சத்தினை அரசு மான்யம் நிதி பெற்று செலவினம் மேற்கொள்ளலாம்.

**(E6 / EST. No. 295 / B / 2024-25)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

**42)** சேலம் மாநகராட்சி **2024–25** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் அஸ்தம்பட்டி மண்டல அலுவலகம் கோட்டம் எண் **15** இல் ஆணையாளர் அவர்களின் அலுவலக குடியிருப்பு கட்டிடத்தில் கூடுதல் வசதிகள், வர்ணம் பூசுதல் உள்ளிட்ட பணிகளுக்கு **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**3.37** இலட்சத்திற்கு **27–01–2025** இல் நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில் மேற்படி பணிக்கு **04–03–2025** ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எ ண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் தன்மை (மதிப்பீடு தொகைக்கு) | முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| **1** | M/s Sri Vaideeswara & Co.,<br>2/154 Pandarathankattu Valavu,<br>Mallikuttai Post,<br>Omalur Tk Salem-636 503. | **0.06%** குறைவு<br>(ரூ.**2,82,118.00**) | EMD. Rs.3370/-<br>Ref No. 6291971261832<br>UTR No.CPAEWJNCJ5<br>SBI Bank / Date 03-03-2025. |
| **2** | Thiru. T. Vaithy,<br>196, West Street,<br>Dadagapatty, Salem-6. | **0.24%** அதிகம்<br>(ரூ.**2,82,977.00**) | EMD. Rs.3370/-<br>Ref No. 6291971261870<br>UTR No.CPAEWJORY9<br>SBI Bank / Date 03-03-2025. |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகைக்கு **0.06%** குறைவான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வழங்கிய M/s Sri Vaideeswara & Co., ஒப்பந்ததாரர் சேலம். அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.**2,82,118.00/–**ஐ ஏற்று ஒப்புக்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை அரசாணை (MS) எண்: **158** நாள்: **02–11–2022** மற்றும் **2023** ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி **248** Table –II இன் படி மேற்கண்ட பணிக்கு M/s Sri Vaideeswara & Co., ஒப்பந்ததாரர் சேலம். அவர்களுக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**(E6/ EST No.257/ B /2024-25)**

**தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.**

**43)** சேலம் மாநகராட்சியில் சேகரம் ஆகும் திடக்கழிவுகளில் மக்கும் தன்மையுள்ள கழிவுகளிலிருந்து செரிவூட்டப்பட்ட இயற்கை எரிவாயு தயாரிக்கும் ஆலையை DBFOT முறையில் அமைக்க தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புறம் **2.0**) திட்டத்தில் செயல்படுத்த அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்பப்பட்டு, அதன்படி ரூ.**57.70** கோடி செலவில் நாள் ஒன்றுக்கு **200** டன் வீதம் மக்கும் திடக்கழிவுகளை கையாளக்கூடிய ஆலையை அமைக்க அரசாணை எண் (ப) எண்: **145** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC7) நாள்: **11–03–2023** (ம) அரசாணை எண் (பல்வகை) எண் **78** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC 6) துறை நாள்: **10–06–2024** ஆகியவற்றின்படி அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்டவாறு செரிவூட்டப்பட்ட இயற்கை எரிவாயு தயாரிக்கும் ஆலையை அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோர தேவையான ஒப்பந்த ஆவணங்களுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் ( Technical Clearance) 14-03-2023 அன்று தலைமை பொறியாளர் அவர்களால் வழங்கப்பட்டது.

மேற்கண்ட பணிக்கான முதல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு **16–05–2024** அன்று திறக்கப்படும் முறையில் கோரப்பட்டது. அடுத்தடுத்த ஒப்பந்தப்புள்ளி அழைப்புகளில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படாத நிலையில் நான்காவது ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **26.06.2024** அன்று கீழ்காணும் மூன்று நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1) M/s Mahasakthi Bio Enercon Pvt Ltd., Coimbatore.
2) M/s Refex Green Power Ltd, Chennai.
3) M/s Bharath Petroleum Corporation Ltd., Mumbai.

சென்னை தலைமை செயலகத்தில் **02–09–2024** அன்று அரசு சிறப்பு செயலாளர் நிதித்துறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஒப்பந்தப் புள்ளிகளுக்கான தொழில்நுட்ப கூர்ந்தாய்வு கூட்டத்தில் மேற்காணும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்: **01** மற்றும் **02** இல் கண்டுள்ள இரண்டு நிறுவனங்கள் மட்டும் தகுதி பெற்றவையாக தீர்மானிக்கப்பட்டது. அதன்படி மேற்கண்ட நிறுவனங்களின் விலை விபர ஒப்பந்தப்புள்ளிகள் ( Financial Bid) திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கோரிய நிறுவனத்தின் பெயர் | டன் ஒன்றுக்கு மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய உரிமை கட்டணம் (Royalty Charge) |
|---|---|---|
| 1 | M/s Mahasakthi Bio Enercon Pvt Ltd., Coimbatore. | ரூ.307.00 |
| 2 | M/s Refex Green Power Ltd., Chennai. | ரூ.315.00 |

தொடர்ச்சி..

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு நகராட்சி இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. மேற்காணும் விலை விபர ஒப்பந்தப்புள்ளிகளில் டன் ஒன்றுக்கு அதிகபட்ச தொகையாக ரூ.**315/–** வீதம் மாநகராட்சிக்கு செலுத்த முன் வந்த M/s Refex Green Power Ltd, Chennai. என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி ஆணை வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் Roc. No. 34180 / 2022 /SB1 நாள்: **14–03–2025** இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி M/s Refex Green Power Ltd, Chennai. என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ஏற்பளிப்பு கடிதம் வழங்கலாம். ஒப்பந்த விதி எண் : **22.2.C** -ன் படி ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள உரிமை தொகையான (Royaity Charge) ரூ.**315/–**ஐ முதல் வருடமும், அடுத்து வரும் ஒவ்வொரு வருடத்திற்கும் முந்தைய வருடத்தின் உரிமைத்தொகையில் இருந்து **5** சதவிகிதம் கூடுதலாக மேற்படி நிறுவனம் வழங்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு கட்டுமான காலத்திற்கு பிறகு **20** வருட காலத்திற்கு வழங்க நிபந்தனை விதித்து ஏற்பளிப்பு கடிதம் ( Letter of Acceptance) வழங்கலாம்.

மேற்காணும் பணிக்கான ஒப்பந்த விதிகளின் படி ஒப்பந்த நிறுவனத்திற்கு **8** ஏக்கர் நிலத்தினை மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு ஆலை அமைக்க மாநகராட்சி வழங்க வேண்டியுள்ளது. இதற்கான நில வாடகையாக மேற்படி ஒப்பந்ததாரரிடமிருந்து ஒரு வருடத்திற்கு சதுர மீட்டர் ஒன்றுக்கு ரூ.**1** வீதம், (ஏக்கர் ஒன்றிற்கு ரூ.**4047/–**) ஒப்பந்ததாரர் மாநகராட்சிக்கு செலுத்த ஒப்பந்த விதி எண்: **22.1** இல் வகை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி திடக்கழிவு மேலாண்மை ஆலை அமைக்க தேவையான **8** ஏக்கர் பரப்பளவு செட்டிச்சாவடி நிலத்தினை, செட்டிச்சாவடி திடக்கழிவு மேலாண்மை தளத்தில் M/s Refex Green Power Ltd, Chennai. நிறுவனத்திற்கு வழங்கவும், ஒப்பந்த விதி எண்: **22.1** –ன்படி உரிமைத் தொகையாக வருடம் ஒன்றுக்கு சதுர மீட்டர் ஒன்றிற்கு ரூ.**1.00** வீதம் மேற்படி ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து வசூலிக்கவும், மேலே குறிப்பிட்ட ஒப்பந்த விதி எண்: **22.2.** C –ன்படி ஏற்பளிப்பு கடிதம் ( Letter of Acceptance) மற்றும் பணி ஆணை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

(அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ) மேற்படி பணிக்கு எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(E3 / 3479 / 2024)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

**44)** சேலம் மாநகராட்சி **2024–25** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் அஸ்தம்பட்டி மண்டல அலுவலகம் கோட்டம் எண் **31** இல் மாநகராட்சி மைய அலுவலக கட்டிடத்தின் தரைதளம், முதல் தளம், இரண்டு தளம் வரை உள்ள அனைத்து ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறைக்கு நீர் விநியோகம், சீரமைப்பு பணி, மற்றும் சுகாதார எற்பாடுகள், தரைதளத்தில் Aluminium Partition பணி மற்றும் கூடுதல் மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**9.93** இலட்சத்திற்கு **07–02–2025** இல் நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில் மேற்படி பணிக்கு **13–03–2025** ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எ ண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் தன்மை (மதிப்பீடு தொகைக்கு) | முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| 1 | M/s Sri Vaideeswara & Co.,<br>2/154 Pandarathankattu Valavu,<br>Mallikuttai Post,<br>Omalur Tk Salem-636 503. | **0.04%** குறைவு<br>**(ரூ.8,31,857.20)** | EMD. Rs.9930/-<br>Ref No. 6298591261843<br>UTR No.CPAEWJNL4<br>SBI Bank / Date 03-03-2025. |
| 2 | Thiru. T. Vaithy,<br>196, West Street,<br>Dadagapatty, Salem-6. | **1.03%** அதிகம்<br>**(ரூ.8,40,819.40)** | EMD. Rs.9930/-<br>Ref No. 6298591261872<br>UTR No.CPAEWJPBC2<br>SBI Bank / Date 03-03-2025. |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகைக்கு **0.04%** குறைவான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வழங்கிய M/s Sri Vaideeswara & Co., ஒப்பந்ததாரர் சேலம். அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.**8,31,857.20/–**ஐ ஏற்று ஒப்புக்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை அரசாணை (MS) எண்: **158** நாள்: **02–11–2022** மற்றும் **2023** ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி **248** Table –II இன் படி மேற்கண்ட பணிக்கு M/s Sri Vaideeswara & Co., ஒப்பந்ததாரர் சேலம். அவர்களுக்கு பணி ஆணை வழங்கி பணி முடிக்கப்பட்டதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

மன்றம் அனுமதிக்கலாம்.

**(E6/ EST No.261/ B /2024-25)**

**தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.**

**45)** சேலம் மாநகராட்சி **2024–25** ஆம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் அம்மாபேட்டை மண்டலம் கோட்டம் எண் **32** இல் தேர்வீதியில் உள்ள மாநகராட்சி பள்ளி வளாகத்தில் தடுப்பு சுவர் கட்டி தனியாக வழிதடம் அமைத்தல் மற்றும் பள்ளியின் உட்புறத்தில் சத்துணவு கூடம் பழுது சரிசெய்தல் ஆகிய பணிகளுக்கு **2024–25** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**6.80** இலட்சத்திற்கு **18–12–2024** இல் நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில் மேற்படி பணிக்கு **14–02–2025** ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை ஏற்று கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் தன்மை (மதிப்பீடு தொகைக்கு) | முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| **1** | Thiru. T. Vaithy,<br>196, West Street,<br>Dadagapatty, Salem-6. | **0.01%** குறைவு<br>**(ரூ.5,61,095.38)** | EMD. Rs.6,800/-<br>Ref No. 6236111250432<br>UTR No.CPAEUSPHW4<br>SBI Bank / Date 14-02-2025. |
| **2** | M/s Sri Vaideeswara & Co.,<br>2/154 Pandarathankattu Valavu,<br>Mallikuttai Post, Salem-503. | **0.92%** அதிகம்<br>**(ரூ.5,66,294.39)** | EMD. Rs.6,800/-<br>Ref No. 6236111250454<br>UTR No.CPAEUSTQG6<br>SBI Bank / Date 14-02-2025 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகைக்கு **0.01%** குறைவான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வழங்கிய Thiru. T. Vaithy, ஒப்பந்ததாரர் சேலம். அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.**5,61,095.38/–**ஐ ஏற்று ஒப்புக்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை அரசாணை (MS) எண்: **158** நாள்: **02–11–2022** மற்றும் **2023** ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி **248** Table –II இன் படி மேற்கண்ட பணிக்கு Thiru. T. Vaithy, ஒப்பந்ததாரர் சேலம். அவர்களுக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பணிக்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**

மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**(E6/EST No.435 / B / 2024-25)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**46)** சேலம் மாநகராட்சி **2024-25** ஆம் ஆண்டு சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண் **15**-ற்குட்பட்ட வார்டு J, பிளாக் **48**, நகர புல எண். **43**-இல் புதியதாக நியாய விலைக்கடை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் செ.மு.ஆ.எண்: **4266 / 2024** / அ**2** நாள்: **18-09-2024** இன் படி, உதவி செயற்பொறியாளர், பொ.ப.து அவர்களின் கடிதம் எண். கோ/ MLA / உ.செ.பொ (க & ப) நாள்: **31-01-2025** இன் வாயிலாக புதியதாக நியாய விலைக்கடை கட்டுவதற்கு தடையின்மை சான்று வழங்க வேண்டி கடிதம் வழங்கியுள்ளனர்.

மேற்படி இடத்தினை **15**வது கோட்ட உதவி பொறியாளர் நேராய்வு மேற்கொண்டனர், பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு இல்லாமல், புதியதாக நியாய விலை கடை கட்டுவதற்கு தடையின்மை சான்று வழங்கலாம் என தெரிவித்துள்ளார். அதன் பேரில் மேற்படி இடத்தில் புதியதாக நியாய விலை கடை கட்டுவதற்கு தடையின்மை சான்று வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

மன்றம் அனுமதிக்கலாம்.

**(E6/ 5170 /2025)**

**தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.**

47) தமிழ்நாடு காலநிலை மீள்திறன்மிக்க நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ளும் உள்ளாட்சி அமைப்புகள் தமது உள்ளாட்சிகளில் கடைபிடிக்கத் தக்க "பாதாள சாக்கடை திட்டத்திற்கான செயல்பாடுகள்" தொடர்பான துணை விதிகளை உரிய அலுவரின் அனுமதி பெற்று அரசிதழில் வெளியிட அரசு கூடுதல் தலைமைச் செயலர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியம் அவர்களின் கடிதம் எண்.TNUIFSL/Projects SMIF-TN III & TNCRUDP நாள் 6.11.2024-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மாநிலம் முழுவதும் உள்ள உள்ளாட்சி அமைப்புகள் கடைப்பிடிக்கத் தக்க மாதிரி உப விதிகளை வகுத்து நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் ROC.NO.33702/2024/EAI நாள் 17.03.2025-ன் படி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சேலம் மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்தின் செயல்பாட்டிற்கு நெறிமுறைகள் மற்றும் கட்டண விபரங்கள் அடங்கிய உப விதிகள் தயார் செய்யப்பட்டு ஒப்புதலுக்காக நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளது. அவ்விதம் தயாரிக்கப்பட்ட சேலம் மாநகராட்சி பாதள சாக்கடைத் திட்ட செயல்பாட்டிற்கான உப விதிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**Under Ground Sewerage (Bye Law)**

In exercise of the powers conferred under sub-section (1) of section 199 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act of 1999) the council of Salem City Municipal Corporation, hereby makes the following By-Laws with the approval of the Director for regulation of Under Ground Drainage Connection.

1. (1) For getting Under Ground drainage connections, the owner of the building or the tenant of the building with the approval of the owner shall apply to the Commissioner in "Form 1" in the Annexure along with the application fees of Rs.100/-, details indicated in Form 1 and details of property such as copy of sale deed, property tax remittance etc.,

   (2) The City Engineer or his/her authorized officer shall scrutinize the application and advise the owner/tenant to remit the deposit depending upon the plinth area as specified in Table-1 either in one or more installments as ordered by the Commissioner based on the Council resolution along with charges towards inspection, road restoration and centage.

   (3) The commissioner shall thereafter issue order in Form 2 to provide house service connection.

   (4) The connections shall be given through the Corporation Trained Plumbers / Contractor engaged by the owner/tenant, under the supervision of Corporation authorities in the order of priority prepared based on the date of registration of application.

தொடர்ச்சி..

2(1) For getting Under Ground drainage connections, in the new Under Ground drainage system provided or being provided as part of any comprehensive Under Ground drainage improvement scheme, the owner of the building or the tenant of the building with the approval of the owner shall apply to the Commissioner in "Form 1" in the Annexure along with the application fees of Rs.100/-, details indicated in the Form 1 and details of property such as copy of sale deed, property tax remittance etc.,.

(2)The commissioner shall thereafter issue order in Form 2 to provide house service connection.

(3)The connections shall be given through the civil works Contractor engaged by the Corporation to the Under Ground drainage improvement scheme. The Contractor, upon advice by the City Engineer/Municipal Engineer, shall provide UGS service connections under the contract for the Under Ground drainage improvement project.

(4)The City Engineer shall parallelly advise the applicants to remit the deposit depending upon the plinth area as specified in Table-1 either in one or more installments as ordered by the Commissioner. The City Engineer shall ensure that all the assessed properties (both domestic and non-domestic) are provided with Under Ground drainage service connections without any omissions.

3.The application received along with the requisite documents as specified in Table-1 will only be considered for providing Under Ground drainage connection

4.The Corporation shall levy the UGS charges based on the plinth area of the building as per the rates specified in Table-2 for both domestic and non-domestic connections. The user charges shall be levied on a flat rate basis

(1) Where the Underground Drainage Sewerage System is facilitated in the Municipal Corporation the households / buildings and other utilities shall avail the Under Ground Sewerage System service connection with required internal plumbing to connect the same to the machine hole / collection system after obtaining the permission from the Corporation .

(2)The area not facilitated with the Underground System in the Corporation the households, buildings shall construct impermeable septic tank to collect and store the human excreta and the sewage generated by the users and to dispose the same on timely basis through the Municipal Corporation licensed Sullage lorry operators. With the permission of Commissioner of Municipal Corporation, the licensed sullage operators shall dispose the collected sewage from the individual households, septic tanks to the designated and authorised STP/FSTP.

**5**(1) Rain water harvesting structure shall be established within the premises by the owners of households / buildings to improve the ground water level and to maintain the water table and to prevent the entry of rain water into the Under Ground drainage sewerage system. The rain water harvesting structure shall be constructed with the advice of Engineers of the Municipal Corporation. The provision of rain water harvesting structure in the premises of households / building shall be ensured before permitting the house service sewerage connection.

தொடர்ச்சி..

**(2)** Rain water harvesting structures shall be constructed in such way to prevent to the entry of collected rain water into the inspection chamber of the sewerage system. This structure shall be constructed using the materials and to adopt procedures recommended by the Engineers of Municipal Corporation

6. The internal Plumbing infrastructures shall be constructed in such a way to collect black water and gray water such as the water from the bathroom and kitchen and to let off the waste water collected into the underground sewerage system established by the Municipal Corporation. The drainage structure will be constructed according to specification provided in the Tamil Nadu Combined Building Rules 2019.

7. The Under Ground sewer line shall be within the premises of households with proper internal plumbing and related infrastructure including Air vent pipe, before connecting the sewer line to the collection system as instructed by the Municipal Corporation . In every House service connection Gully trap is to be provided and in workshop, Bakery and Hospitals Greece trap and oil trap must be provided.

**8** The inspection chamber and bell trap / bit trap shall be covered with a top cover as per the recommendation of City Engineers.

**9** The House Service Connection, collection pipe should be connected with the collection system of the Under Ground Infrastructure of the Municipal Corporation with appropriate gradient and bends so as to carry the domestic sewage to the system / machine hole without any blockage. Specifically the inter connection should not be made perpendicularly / horizontally with the Municipal Corporation Sewerage System.

**10** The Residents/occupier/owner in the apartments a bulk sewage waste water generator should be established as a small scale sewage treatment plant within their premises and to be connected within the nearest machine hole in the underground sewage system.

**11** If the underground sewage collection system required to construct by crossing a wall structure or underneath of a wall, then the collection system shall be constructed with proper bend and using Reinforced Cement Concrete as recommended by the Corporation Engineers, in such a way to ensure the protection of sewage carrying pipe without damaging the underground drainage pipe due to construction of wall over the sewage pipe.

**12** The sewage carrying / collection system shall be laid within the premises up to the compound wall of the property so as to connect the same to Corporation underground sewage system by maintaining minimum distance between both connecting points.

**13** When the existing households not having any toilet in the house, the owner / is held responsible to construct toilets and they shall be connected to the underground drainage so as system to avoid open defecation.

14.When a shopping complex without separate urinal and toilet room, a common toilet shall be constructed and connected with the nearest machine hole in the underground drainage system as guided by Corporation Engineers.

15 A Trap, grating shall be fixed in the sewerage line as per the recommendation of Engineers of Municipal Corporation .

**தொடர்ச்சி..**

16. Owners or occupant of building / premises shall facilitate the Municipal Corporation Engineers to carryout inspection at any time.

17 The building owner / occupant who desires to get underground drainage Connection for any premises shall apply to Commissioner of the Municipal Corporation either through online or in person by submitting Form-1 (prescribed format available in annexure-1) along with the below listed enclosure. The application Form-1 received without the listed enclosures shall be considered as invalid application.

a) Copy of property tax / Receipt for the building for which Under Ground Drainage Connection is requested to be enclosed as a proof for "No due" on property tax Service remittance.

b) A sketch/drawing indicating the plumbing details from the machine hole to the premises shall be prepared and duly certified by the licensed engineer should be enclosed. Further, the proof for the remittance of road restoration charges for the length of plumbing indicated in the drawing. The road restoration shall be determined as indicated below. But if the new Under Ground Drainage Scheme is ongoing in that area,then the residents need not remit road restoration charges since it is included in the scheme and the connection will be given by the Corporation.

c) The proof for the remittance of caution deposit should be enclosed.

d) The proof for the remittance of Rs. 1000/- per connection as supervision charges should be enclosed except the underground sewage scheme implementing area.

e) An undertaking certificate shall be signed, if the Form -1 application is submitted to avail Underground Sewage connection for multi storied building apartments, group houses in which all the property owners/residents should sign in the application.

f) House service connection for Multi-storied building, apartments, group houses should be submitted in Form 1 with the sketch/drawing indicating the distance between the distribution line to the premises and the number of sewage connections eligible to be availed. The proof for the remittance of road restoration charges for the length of plumbing, number of connections as indicated in the drawing should be calculated as per the table enclosed. New ongoing Underground Sewage scheme project implementing area shall be exempted to remit the road restoration charges. The amount mentioned below is for the year in which this By-Law came into force. Therefore an additional 5% per annum shall be payable to the assessing Corporation.

| For 6-8 meter length of soil | Bitumen road for 6-8m length | Cement concrete floor for the length of 6-8m |
|---|---|---|
| Rs.585/- | Rs.1250/- | Rs.1445/- |

g) The application (Form 1) Seeking Permission to avail Under Ground Drainage connection for Multi-storied Building , Apartments and group houses shall be enclosed with the proof for remittance of property tax without any due for all the households/properties/tenants/flats.

h) The application (Form 1) seeking permission to avail house service connection for Multi storied building, apartments and group houses should be enclosed with the proof for remittance of caution deposit by all the owners/residents of the households / properties / Tenant / Flats

தொடர்ச்சி..

18. (1) The following deposit and user charges for Under Ground Drainage shall be payable by the Owner/ Tenant for obtaining House Service Connection.

**Table-1: Deposit for Under Ground Drainage Connection**

| Plinth Area of Assessment in Sq.ft | Under Ground Drainage Service Connection Deposit (in Rs./connection) | | | |
|---|---|---|---|---|
| | Residential | Commercial | Industrial | Educational /Institution/ Government Offices/Others |
| **Municipal Corporation** | | | | |
| <=600 | 7500 | 15000 | 15000 | 15000 |
| 601-1200 | 10000 | 20000 | 20000 | 20000 |
| 1201-1800 | 12500 | 25000 | 25000 | 25000 |
| 1801-3500 | 15000 | 30000 | 30000 | 30000 |
| 3501-5000 | 20000 | 40000 | 40000 | 40000 |
| 5001-10000 | 25000 | 50000 | 50000 | 50000 |
| Above 10001 | 40000 | 80000 | 80000 | 80000 |

**Table-2:User Charges for Under Ground Drainage Connections**

| Plinth Area of Assessment in Sq.ft | User Charges for Under Ground Drainage Connections (in Rs./connection) | | | |
|---|---|---|---|---|
| | Residential | Commercial | Industrial | Educational /Institution/ Government Offices/Others |
| **Municipal Corporation** | | | | |
| <=600 | 120 | 360 | 360 | 360 |
| 601-1200 | 150 | 420 | 420 | 420 |
| 1201-1800 | 180 | 480 | 480 | 480 |
| 1801-3500 | 210 | 630 | 630 | 630 |
| 3501-5000 | 250 | 750 | 750 | 750 |
| 5001-10000 | 280 | 840 | 840 | 840 |
| Above 10001 | 300 | 900 | 900 | 900 |

தொடர்ச்சி..

(2)The Under Ground service connection deposit and water consumption charges shall be increased at the rate of 3 % on every year so as cover the cost of operation and maintenance of the entire sewerage system.

(3) The owner / occupant, who have already availed a Connection, shall also be required to pay the remaining amount of deposit for Under Ground drainage to the extent of the present rate of such deposit.

19 (1).Providing UGS for Individual Households / Residents, if the length of the UGS connection given from machine to house hold premises, then 100 mm pipe shall be used.

(2).Providing UGS for Multi- storied building/Apartments/Group Houses,

the Under Ground Sewerage Connection for multistoried building, apartments, group houses pipes shall be provided as indicated in the below table irrespective of the total number of house hold in the multistoried buildings, apartments and group houses.

**Table**

| Sl.No | Apartments | No.of Connection | Deposit (Rs) | Size of Pipe (in. dia) |
|---|---|---|---|---|
| 1 | Upto 4 Flats | I connection | 20,000/- | 100mm dia pipe |
| 2 | From 5 to 8 Flats | 2 connection | 20,000/- each connection | 150mm dia pipe |
| 3 | From 9to12 Flats | 3 connection | 20,000/- each connection | 200mm dia Pipe |
| 4 | above 12 Flats | 1 connection / 4 Flats | 20,000/- each connection | Decided by City Engineer/Municipal Engineer |

**Provided that <u>every Property tax assessment should be treated as single unit for assessment UGD user charges</u>**

(3). The tenants / households in the apartments or multi-storied building or group houses shall be provided underground connection and the caution deposit and user charges shall be collected from all the tenants / occupant / residents.

20. The user charges for the purpose on worship places like mosque, temples and churches will be treated as Domestic purpose. If any one of their property used other than worship purposes is to be taken on commercial and charge will be levied accordingly.

21. Demand for UGS charges will be made before 10th of every month for a consumption period for the previous two months.

22. If the amount is not paid in the above period, the Executive authority shall be at liberty to cut off the service after the demand is made. If the amount is not paid within the above, the Commissioner shall not be liable for any damages for such disconnection.

தொடர்ச்சி..

23. No connection will be provided to the premise to which is not levied property tax. If an existing domestic under ground connection is in the building which the same will be reconstructed or modified or major repairs connection will be taken into account as on non-domestic purpose and the rate of charges will be collected accordingly.

24. Payment for all Under Ground sewage connection under the terms and conditions laid down in these by laws is not made by the party concerned within the time stipulated, shall be recoverable in the same manner as within the norms for property tax collection.

25. Every person to whom Under Ground Sewage connection is or has been provided by the Municipal Corporation shall be maintained in good condition and any repairs to be attend at their own cost.

26. The Executive Authority may at any time remove any pipe or fittings connected with any house service connection for the purpose of examining the condition of or repairing of such fittings. If on such examination or otherwise, it is found that the pipes or fittings are defective in any respect, the Executive Authority may give notice to the owner or occupier of the premises to execute within a specified time period or one month at the most, if the work necessary to remedy such defect may be carried out. If the work is not executed within the time allowed in the notice or if the defect is likely to cause contamination of water, the Executive Authority may himself / herself execute such work and recover the cost from the owner or occupier or alternatively the connection will be disconnected.

27. Under Ground Sewage connection provided for domestic purpose and the same shall not be used for non-domestic purpose without prior approval from Commissioner. But, if the Commissioner finds that the drainage connection is being used for non-domestic purpose or has reasons to believe so, they may require the house connection owner or the resident to pay charges for non-domestic use as determined under By-Law 24, from the date of notice. If the charges so determined are not paid, the Commissioner may order the disconnection of the house connection.

28. All house service connections granted before date of commencement of these by-law come into force shall be recognised as valid as if they had been granted under these by-law and shall be recognized as authorized connection under the provisions of these bye-law, if the owner or occupier remits the rate applicable under these bye-laws. If the said charges are not paid under these by-laws and such connections are to be treated as for non domestic illegal connections and fine will be imposed at the rate of Rs.3000/- for domestic and Rs.6000/- for non domestic. These connections will be disconnected with fine. On continuous offence, then the House Service Connection will be disconnected permanently.

29. (1) Under Ground drainage used for Government Educational Institutions

and Government Hospitals are exempted from payment of property tax and the User charges will be collected as Domestic charges.

(2) While giving Under Ground Drainage connections to Government Office Buildings and Public Sector Unit, the assessment shall be ensured for providing non-domestic connections.

தொடர்ச்சி..

30. The Corporation/Municipal Council may provide penalties in the by-laws and regulations, and for violation of such by-laws and regulations in accordance with the rules framed under section 199(2) of Tamil Nadu Urban Local Bodies act 1998(act of 1999).

The number of connections to be given, fixing of Deposit amount and user charges for the special buildings such as Shopping malls, Commercial complex, Arcades, Cinema Halls, Marriage halls and other special buildings will be assessed separately by the Commissioner of Salem Corporation considering the number of users and volume of liquid waste etc.

**சேலம் மாநகராட்சியில் தற்போது செயல்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டத்தின் மூலம் அனைத்து குடியிருப்புகளுக்கும் வீட்டு இணைப்பு ஏற்படுத்தி பராமரிக்க வேண்டியுள்ளது. சேலம் மாநகராட்சி எல்லைக்குள் தற்போது செயல்பட்டு வரும் பாதாள சாக்கடை இணைப்புகளை பராமரிக்க பயன்பாட்டில் உள்ள ஜெட் – ராடிங் உள்ளிட்ட இயந்திரங்கள், வாகனங்கள் ஆகியவற்றின் பராமரிப்பு மற்றும் எரிபொருள் ஆகியவற்றுக்கான செலவினம்,**

**தொடர்ச்சி..**

மாநகரில் உள்ள நான்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் பராமரிப்பு செலவு மற்றும் மின்சார கட்டணச் செலவு, மாநகரில் உள்ள இயந்திரத் துளைகள் மற்றும் கழிவு நீர் குழாய்கள் ஆகியவற்றை பராமரிக்கத் தேவையான பணியாட்கள் செலவு உள்ளிட்ட அனைத்துக்குமான வருடாந்தர செலவினம் தற்போது ரூ.2.34 கோடி ஆகும்.

மேலும் பாதாள சாக்கடைத் திட்டம் மாநகரம் முழுமைக்கும் விரிவுப்படுத்த தற்போது நடைபெற்று வரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நிறைவு பெறும் தருவாயில் இச்செலவினம் பன்மடங்கு உயர வாய்ப்புள்ளதாலும் நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ள துணைவிதிகளையும் அதன்படியான கட்டண அமைப்பையும் வருடாந்திர செலவினத்தையும் கருத்தில் கொண்டு தயார் செய்யப்பட்டுள்ள சேலம் மாநகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்ட உப விதிகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் இவ்வலுவலக கோப்பு எண்.Roc.No.4080/2011(SS1)-ன் படி, இம்மாமன்ற தீர்மான எண்.212, நாள்.29.10.2012-ல் இம்மன்றத்தால் அனுமதிக்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட சேலம் மாநகராட்சி பாதாள சாக்கடை திட்ட உப விதிகளை மாற்றி மேற்காணும் உப விதிகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று தமிழ்நாடு அரசிதழில் பதிவு செய்து இம்மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(எஸ்எஸ்1/05121/2025)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**48)** சேலம் மாநகராட்சி **2024–25** ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ், சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.**23**ல் மான்குட்டை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் **(35** MLD**)** இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கு மதிப்பீடு ரூ.**49,80,000/–**இல் மேற்படி பணியை நிறைவேற்ற **28.02.2025** ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் தன்மை (மதிப்பீடு தொகைக்கு) | முன் வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| 1. | M/s. Shree Sai constructions (L1) | (ரூ.36,96,234.00) –11.45%குறைவு | EMD: Rs. 49,800/-, Ref, No.61480451260512, UTR No. CPAEWCZQT7 SBI Bank. |
| 2. | M/s. KSP Constructions | (ரூ.40,07,196.00) –4.00 % குறைவு | EMD: Rs. 49,800 /-, Ref, No.61480451260542, UTR No. CPAEWDAZV2 SBI Bank. |
| 3. | M/s. Ansu Engineering | (ரூ.44,40,000.00) 6.37 %அதிகம் | EMD: Rs. 49,800 /-, Ref, No.61480451258258, UTR No. CPAEVWKPX7 SBI Bank. |
| 4. | M/s. Enrec Engineers | (ரூ.48,00,000.00) 14.99 %அதிகம் | EMD: Rs. 49,800 /-, Ref, No.61480451240758, UTR No. CPAEUQYHZ1 SBI Bank. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் **1–**இல் கண்டுள்ள M/s. Shree Sai Constructions (L1) அவர்களிடமிருந்து மதிப்பீட்டை விட **–11.45**% குறைவு **(**ரூ.**36,96,234.00)** என வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

மேற்காணும் பணியின் செலவினத்தை **2024–25** ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை, அரசாணை (Ms) எண்.**158**, நாள்.**02.11.2022** மற்றும் **2023**ம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதி **248** Table – II இன்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொண்டு, பணி ஆணை வழங்கி, நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

அனுமதிக்கலாம்.

**(SS1/26/24-25)**

**தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.**

49) சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகம்-DBC பணியாளர்கள், சுய உதவி குழு பணியாளர்கள் மற்றும் அம்மா உணவகம் பணியாளர்களுக்கு மாதாந்திர _ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் EPF பங்குத் தொகையை, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திற்கு 06/2013 முதல் 03/2018 வரையிலான காலத்திற்கு சூரமங்கலம் வார்டு அலுவலகத்திலிருந்து ரூ.38,46,818/-னை வங்கி வரைவோலை எண்:778328, நாள்:15.03.2022-லும் ரூ.39,80,701/-னை வங்கி வரைவோலை எண்:778325 ல் நாள்:11.03.2022-ல் செலுத்தப்பட்டது. மேற்படி செலுத்திய தொகைக்கு தற்போது நிர்வாக காலதாமதமாக செலுத்தப்பட்டமைக்கு வட்டி 14B-ரூ.78,18,750/- மற்றும் அபராத வட்டி 7Q - 60,82,261/- செலவு மற்றும் கட்டணம் ரூ.550/- ஆக மொத்தம் ரூ.1,39,01,561/- தற்போது செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்து, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திடமிருந்து 04.03.2025ஆம் தேதி கடிதம் வரபெற்றது.

மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, வருங்கால வைப்பு நிதிக்கு வட்டி மற்றும் அபராத வட்டி தொகை செலுத்தப்பட வேண்டும் என தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்திலிருந்து வரப்பெறும் தொடர் அறிவிப்புகளுக்கு எதிராக தடையாணை கோரி, மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் மாநகராட்சி சார்பாக வழக்கு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதுவரையில் தங்களது அலுவலகத்தால் அனுப்பப்பட்ட அறிவிப்பாணைகளையும், ஆணைகளையும் திரும்பபெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டு, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திற்கு 07.03.2025ஆம் தேதி இவ்வலுவலகம் மூலம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தாரின் TN/CB/RO/SLM/PDC/2410341/S-1/8F/2025, நாள்:05.03.2025 ம் தேதிய உத்தரவின்படி, கனரா வங்கி சூரமங்கலம் கிளையிலிருந்து, சூரமங்கலம் வார்டு அலுவலகம் வங்கி கணக்கு- 62932200090290 என்ற எண்ணிலிருந்து, ரூ.1,39,01,561/- னை, உதவி ஆணையாளர் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி கணக்கு எண்ணிற்கு கையகப்படுத்திக் கொண்டுள்ளனர்.

தொடர்ச்சி..

அதன்பேரில், மேற்படி பொருள் தொடர்பாக சூரமங்கலம் வார்டு அலுவலகம் சார்பில் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு W.P.NO.10798/2025 என்ற எண்ணிட்ட வழக்கு தொடரப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் மேற்படி வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திற்கு தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி DBC பணியாளர்கள், சுய உதவி குழு பணியாளர்கள் மற்றும் அம்மா உணவகம் பணியாளர்களுக்கு மாதாந்திர _ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் EPF பங்குத் தொகை செலுத்துவதில் ஏற்பட்ட நிர்வாக காலதாமதத்திற்கு, உதவி ஆணையாளர் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் சேலம் அவர்களால், இவ்வலுவலக வங்கி கணக்கிலிருந்து ரூ.1,39,01,561/- னை கையகப்படுத்தப்பட்டுள்ளது, என்ற விவரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு :-</u>

பதிவு செய்யலாம்.

உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

(கே6/769/2025)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

50) சேலம் மாநகராட்சியில் உள்ள 16 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் ஏற்கனவே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கத்தின் மூலமாக அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில், காலிப் பணியிடங்களுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் சுகாதாரப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய அவசியம் கருதி, 33 நகர்ப்புர சுகாதார செவிலியர்கள், 7 மருந்தாளுநர்கள், 4 ஆய்வக நுட்புநர்களை 01.01.2025 முதல் 31.03.2025 வரையுள்ள 3 மாத காலத்திற்கு பயிற்சியில் ஈடுபடுத்தி பயிற்சி ஊக்கத் தொகை வழங்க மாமன்ற தீர்மானம் எண்.581 நாள்:24.12.2024 ல் அனுமதிக்கப்பட்டது. தற்போது கீழ்கண்ட விபரப்படி நகர்ப்புர சுகாதார செவிலியர்கள், மருந்தாளுநர்கள் மற்றும் ஆய்வக நுட்புநர் பணியிடங்கள் காலியாக உள்ளது.

| வ. எண் | பணியிடங்களின் விபரம் | பணியிட அனுமதி | பணியில் உள்ளவர்கள் | மொத்த காலி பணியிடம் |
|---|---|---|---|---|
| 1. | நகர்ப்புர சுகாதார செவிலியர்கள் | 52 | 17 | 35 |
| 2. | மருந்தாளுநர்கள் | 16 | 9 | 7 |
| 3. | ஆய்வக நுட்புநர் | 16 | 13 | 3 |
| 4. | ஆய்வக நுட்புநர்(MMU) | 1 | 0 | 1 |

எனவே மேற்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காலிப் பணியிடங்களுக்கு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி, பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகளை தங்குதடையின்றி வழங்கிட ஏதுவாக தகுதியான படிப்பு முடித்தவர்களை பின்வரும் அட்டவணையில் கண்டுள்ளபடி தேசிய நகர் குழும தொகுப்பூதிய விகிதங்களின்படி உத்தேச மாத செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு மேற்கண்ட காலிப் பணியிடங்களை பூர்த்தி செய்யப்படும் வரை அல்லது 01.04.2025 முதல் 30.06.2025 வரை பணியில் ஈடுபடுத்தி அதற்கு பயிற்சி ஊக்கத் தொகை வழங்க வேண்டியுள்ளது.

| வ. எண் | காலிப்பணியிட விபரம் | தேவையான பணியாளர்கள் எண்ணிக்கை | மாதாந்திர ஊக்கத்தொகை ரூ. | அனுமதிக்கப்படும் காலம் |
|---|---|---|---|---|
| 1. | நகர்ப்புர சுகாதார செவிலியர்கள் | 35 | 14000 | 01.04.2025 முதல் 30.06.2025 வரை |
| 2. | மருந்தாளுநர்கள் | 07 | 14000 | |
| 3. | ஆய்வக நுட்புநர் | 04 | 12000 | |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு 35 செவிலியர்கள், 7 மருந்தாளுநர்கள், 4 ஆய்வக நுட்புநர்கள், ஆகியோரை 01.04.2025 முதல் 30.06.2025 வரையுள்ள 3 மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்த அனுமதிக்கவும், அவர்களுக்கு மாதாந்திர பயிற்சி ஊக்கத் தொகையை பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:–

அனுமதிக்கலாம்.

(எப்3/7813 /2022)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ஆ, இராமச்சந்திரன்
மேயர்
சேலம் மாநகராட்சி.

சேலம்–1.
27–03–2025.